பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 113

புதன்கிழமை
19 மார்ச் 2025

பங்குனி 05 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

புதன்பொய்கை

இவ்வருடத்தில்
2.3 ட்ரில்லியன்
அரசுக்குக்
கடன்

## குருந்தூர்மலை விவகாரம்; ஆராய்வதற்குத் தனிக்குழு

### பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரை ஆராய்ச்சிப் பணிகளுக்கும் தடை!



கொழும்பு, மார்ச் 19
முல்லைத்தீவு குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்கு விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. அங்கு உருவாகியுள்ள பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரையில், ஆராய்ச்சிப் பணிகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்தார்.

15

## திஸ்ஸ விகாரைக்கு பொறுமையுடன் தீர்வு

கொழும்பு, மார்ச் 19
தையிட்டி - திஸ்ஸ விகாரைக்கு, பொறுமையுடன் தீர்வுகாணப்படும் என்று அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வலிகாமம் வடக்குப் பகுதியில் திஸ்ஸ விகாரை என்ற பெயரோடு விகாரைகள் காணப்படுகின்றன. இதில் தையிட்டி திஸ்ஸ விகாரைக் காணியை அடிப்படையாகக்கொண்டு பிரச்சினைகள் தோற்றம்

15

உள்ளூராட்சித் தேர்தல்

## யாழில் நேற்று மாலைவரை 159 தரப்புகள் கட்டுப்பணம்

யாழ்ப்பாணம், மார்ச் 19
உள்ளூராட்சித் தேர்தலுக்கான கட்டுப்பணம் நாடளாவியரீதியில் செலுத்தப்பட்டுவரும் நிலையில், யாழ்ப்பாணத்தில் 159 தரப்புகள் தமது கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.சசீவன் தெரிவித்துள்ளார்.

15

யாழ். மாநகரசபைக்கு

## 12 தரப்புகள் கட்டுப்பணம்!

யாழ்ப்பாணம், மார்ச் 19
உள்ளூராட்சித் தேர்தலில் யாழ்ப்பாணம் மாநகரசபையில் போட்டியிடுவதற்காக, இதுவரை 12 தரப்புகள் தமது கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளன.10 அரசியற் கட்சிகளும், 2 சுயேச்சைகளுமே

15

கட்சியின் உறுப்புரிமை விவகாரம்

## சிவமோகனின் மனு மீது நாளை நீதிமன்று முடிவு

யாழ்ப்பாணம், மார்ச் 19
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து தம்மை இடைநிறுத்தியமை தொடர்பில், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மருத்துவர் எஸ்.சிவமோகன் தாக்கல்செய்த வழக்கின் மீது நாளை நீதிமன்றம் தனது முடிவை அறிவிக்கவுள்ளது.
யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி

13

யாழ்ப்பாணம் மாவட்டத்தில்

## 11,081 குடும்பங்களுக்கு காணிகள் இல்லை!

யாழ்ப்பாணம், மார்ச் 19
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 11 ஆயிரத்து 81 குடும்பங்கள் தமக்குக் காணிகள் இல்லை என்றும், காணிகளை வழங்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத் தகவல்

15

## போதை மாபியாக்களை அழிக்க புதிய சட்டங்கள்

ஜனாதிபதி அநுர உறுதி



கொழும்பு, மார்ச் 19
குற்றச்செயல்கள் மற்றும் போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்குத் தேவையான வசதிகளை வழங்கவும், புதிய சட்டங்களை தயாரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க

15

## பணிப்புறக்கணிப்புப் போர்; சுகாதாரசேவை நேற்று முடக்கம்!

கொழும்பு, மார்ச் 19
துணைமருத்துவ மற்றும் சுகாதார ஊழியர்களின் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் காரணமாக, வடக்கு, கிழக்கு உட்பட நாடளாவியரீதியில் நேற்று மருத்துவ, சுகாதார சேவைகள் பாதிக்கப்பட்டன.
சுகாதார ஊழியர்களின் மேலதிக கொடுப்பனவு உறுதிசெய்யப்பட வேண்டும், ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்துதுணைமருத்துவ மற்றும் சுகாதார ஊழியர்களின் தொழிற்சங்கங்கள் நாடளாவியரீதியில் நேற்றுப் பணிப்புறக்கணிப்புப் போராட்

15

## மோட்டர் திருட்டு; ஒருவர் மறியலில்!

யாழ்ப்பாணம், மார்ச் 19
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூளாய் வேரம் பகுதியில் உள்ள




'உவையள் என்னத்தை ஆராய்ஞ்சாலும் கடைசியில விகாரைக்குத்தானே சப்போர்ட் பண்ணுவினம் கண்டியளோ'

## மதத்தலங்கள் அனைத்திலும் பாகுபாடில்லாத அபிவிருத்தி!

கொழும்பு, மார்ச் 19
'பூஜா பூமி' அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் விகாரைகள் புனரமைக்கப்படுவதைப் போன்று இந்து ஆலயங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், இஸ்லாமியப் பள்ளிகளையும் அபிவிருத்தி செய்யவுள்ளோம். மதத்தலங்கள் அனைத்தும் எந்தப் பாகுபாடும் இல்லாமல் அபிவிருத்தி செய்யப்படும் என்று அமைச்சர் ஹினிதும

15

## ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகளை சட்டத்தின் முன் நிறுத்துவது உறுதி!

அமைச்சர் நளிந்த தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 19
பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் ஆதங்கம் நியாயமானது. உயிர்த்தஞாயிறுத் தாக்குதல்களுடன் தொடர்புடைய சூத்திரதாரிகள் விரைவில் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்படுவர் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.
'ஏப்ரல் மாதம் 21ஆம் திகதிக்கு முன்னர்,

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 18.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4021 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 09 57 59 67 |
| விசேட எழுத்து | X |

**ஹந்தஹன ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 18.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1088 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 15 20 24 29 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 18.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 047 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 4 2 8 6 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 18.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2127 |
| ஆங்கில எழுத்து | O |
| சுப்பர் இலக்கம் | 06 |
| வெற்றி இலக்கங்கள் | 27 74 76 78 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 18.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5779 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 4 7 5 6 1 1 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 18.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1809 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 06 51 52 54 |
| விசேட எழுத்து | H |

**அத சம்பத**

| | |
|---|---|
| திகதி | 18.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0354 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 5 6 1 1 |

# உள்ளூராட்சித் தேர்தலில் தமிழரசு - மு.கா. கூட்டணி

**கொழும்பு, மார்ச் 19**

**உள்ளூராட்சித் தேர்தலில் சில தொகுதிகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து களமிறங்குவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. கண்டியில் தராசுச் சின்னத்திலும், கொழும்பு மற்றும் புத்தளத்தில் மரச் சின்னத்திலும் போட்டியிடவுள்ளோம்.**

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தேர்தல் விதிமுறைகளில் காணப்படும் குளறுபடிகள் காரணமாக ஒரு வாக்கு அதிகமாகக் காணப்பட்டாலும் அனைத்து ஆசனங்களும் ஒரு கட்சிக்கே உரித்தாகக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.

தொகுதிகளில் உள்ள இன விகிதாசாரத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியும், நாமும் கலந்தாலோசித்து சில இடங்களில் அவர்கள் சார்பாகத் தமிழர் வேட்பாளர்களையும், எம் சார்பில் முஸ்லிம் வேட்பாளர்களையும் அவர்களின் சின்னத்தில் களமிறக்கத் திட்டமிட்டுள்ளோம்.

எமக்குக் கிடைக்கக்கூடிய பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்வதே இந்த உடன்பாட்டின் உண்மையான நோக்கமாகும். தமிழரசுக் கட்சிக்கு அந்தந்தத் தொகுதிகளில் ஆட்சியமைப்பதற்கான ஆதரவையும் வழங்குவோம்.

புத்தளம் நகரசபையிலும் மாநகர சபையிலும், கொழும்பு, கண்டி மாநகர சபைகளிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடவுள்ளது.

கண்டி மாநகரசபையில் தராசுச் சின்னத்தில் களமிறங்கவுள்ளோம். கொழும்பு மாநகரசபையிலும், புத்தளத்திலும் கட்சியின் சொந்தச் சின்னமான மரத்தில் போட்டியிடவுள்ளோம் -என்றார். (எ-இ)

**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 18.03.2025 | செவ்வாய்க்கிழமை | 0487 | T | 0 1 1 6 4 4 |

**Super Ball DLB**

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 18.03.2025 | செவ்வாய்க்கிழமை | 2753 | G | 01 06 19 50 |

**சனிதா DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 18.03.2025 | செவ்வாய்க்கிழமை | E | 49 51 66 72 | 4914 |

**SASIRI DLB**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 18.03.2025 | செவ்வாய்க்கிழமை | 0645 | 17 22 48 |

**லக்ன ராசி DLB**

| திகதி | தினம் | மிதுனம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 18.03.2025 | செவ்வாய்க்கிழமை | ♊ | 14 24 32 49 | 4465 |

**KAPRUKA DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 18.03.2025 | செவ்வாய்க்கிழமை | H | 06 | 12 19 38 63 | 1929 |

**அத கோடிபதி DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 18.03.2025 | செவ்வாய்க்கிழமை | A | 01 15 37 39 | 2579 |



## அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் தேங்கியுள்ள 400 வாகனங்கள்

அம்பாந்தோட்டை, மார்ச் 19

நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட சுமார் 400 வாகனங்கள் தற்போதும் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் தேங்கியுள்ளன என்று இலங்கை வாகன இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

வாகனங்கள் விடுவிக்கப்படாமைக்கு வாகன இறக்குமதியின்போது விதிக்கப்பட்ட தவறான நிபந்தனையே காரணம் என்று இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் சம்பந் மெரேஞ்சி குற்றஞ்சாட்டியுள்ளார். (எ-இ)

## தேசிய பாதுகாப்புத் தொடர்பான பதவியை ஏற்பதற்குத் தயாராம்

### சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 19

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்புத் தொடர்பில் அரசாங்கம் பொறுப்பொன்றைத் கையளித்தால் அதை நிறைவேற்றுவதற்குத் தயாராக இருக்கின்றேன் என்று முன்னாள் இராணுவத்தளபதி பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை இன்னும் கண்டுபிடிக்கமுடியாமல் இருப்பது பொலிஸ் துறையில் குறைபாடொன்று உள்ளது என்பதற்கான சான்றாகும். குற்றவாளிகள் தலைமறைவாகி இருக்கும் சூழ்நிலை உருவாகக்கூடாது. அது சீர்செய்யப்பட வேண்டும். பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்புத் தொடர்பில் எனக்கு ஏதேனும் பொறுப்பு கையளிக்கப்பட்டால், மக்களுக்காக அதைச்செய்வதற்குத் தயாராக இருக்கின்றேன். நாட்டுக்காக நாம் முன்னிலையாவோம். -என்றார். (எ-44)



## தேர்தலுக்கான ஏற்பாடு பூர்த்தி

### தமிழரசுக்கட்சி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 19

உள்ளூராட்சித் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போட்டியிடுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன என்று இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இலங்கைத் தமிழரசுக்கட்சி உள்ளூராட்சித் தேர்தலில் தனித்தே போட்டியிடுகின்றது. ஏனைய கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டபோதும், இணக்கப்பாடு எட்டப்படவில்லை.

தேர்தல் முடிந்து ஆட்சியமைக்கும்போது தமிழ்த்தேசியத்துடன் பயணிக்கும் கட்சிகளை இணைத்து ஆட்சியமைக்கமுடியும். தெற்கை மையமாகக்கொண்ட கட்சிகளுக்குத் தமிழ்மக்கள் வாக்களிப்பதைத் தவிர்க்கவேண்டும் - என்றார். (எ-இ)

# ஜே.வி.பி.யின் கொலைகளுக்கும் தண்டனை வழங்குவது அவசியம்

### ராஜகருணா எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 19

பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை முன்னிலைப்படுத்தி கடந்த காலங்களில் ஜே.வி.பி. செய்த கொலைகளை மறைப்பதற்கு இடமளிக்கக்கூடாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஏதேனும் குற்றங்கள் தொடர்பில் ஆணைக்குழுக்களை அமைத்து விசாரணைகளை முன்னெடுப்பது வழமையானதொரு செயற்பாடாகும். ஆனால் பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை மிகப்பழையதாகும். 1994ஆம் ஆண்டு [illegible] ரநாயக்க குமாரதுங்க அரசாங்கத்தில் ஜே.வி.பி. அமைச்சரவையில் அங்கத்துவம் வகித்தது. தற்போதைய காலத்தின் தேவை ஜே.வி.பி.யினரால் செய்யப்பட்ட கொலைகள் தொடர்பில் ஆராய்வதற்கான ஆணைக்குழுவொன்றை நியமிப்பதாகும். பட்டலந்தவில் குற்றமிழைத்தோருக்குத் தண்டனை வழங்கப்படும் அதேவேளை, ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களைக் [illegible] ஜே.வி.பி.யினருக்கும் தண்டனை வழங்கப்படவேண்டும்-என்றார். (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுகர்வுப் பொருள்கள் சதொச விலைகுறைப்பு

கொழும்பு, மார்ச் 19

பல அத்தியாவசிய நுகர்வுப்பொருள்களின் விலை குறைக்கப்பட்டுள்ளதாக லங்கா சதொச அறிவித்துள்ளது.

அதன்படி, ஒரு கிலோகிராம் சிவப்பு சீனியின் விலை 8 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 277 ரூபாவாகவும் ஒரு கிலோகிராம் சிவப்புப் பருப்பு 4 ரூபாவால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலை 279 ரூபாவாகவும் ஒரு கிலோ கிராம் கோதுமைமாவின் விலை 2 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 162 ரூபாவாகவும் ரின்மீன் ஒன்றின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலை 490 ரூபாவாகவும் ஒரு கிலோகிராம் உருளைக்கிழங்கின் விலை 13 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 185 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

அத்துடன் ஒரு கிலோகிராம் வெள்ளைக் கௌபியின் விலை 45 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 750 ரூபாவாகவும் ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயத்தின் விலை 25 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 160 ரூபாவாகவும் ஒரு கிலோ கிராம் வெள்ளைப்பூண்டின் விலை 20 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 575 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது என்றும் சதொச அறிவித்துள்ளது. (ச-இ)



## யானைக்குட்டிக்கு எமனான ஹைஏஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 19

வீதியைக் கடக்க முற்பட்ட குட்டியானையொன்று ஹைஏஸ் ரக வாகனத்துடன் மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளது.

இந்த விபத்து நீர்கொழும்பு- யாழ்ப்பாண வீதியில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. வாகனத்தில் பயணித்தவர்கள் எதுவித பாதிப்பும் இன்றி சிறு காயங்களுடன் உயிர்தப்பியுள்ளனர். (ச-33-27)

## போதைமாத்திரைகளுடன் இரு இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 19

சிறுப்பிட்டியில் போதைமாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த இருவர் அச்சுவேலி பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டனர்.

புத்தூர் சிறுப்பிட்டிப் பகுதியில் உள்ள வீடொன்றில் போதை மாத்திரைகளை உடைமையில் வைத்திருப்பதாக பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய சந்தேகநபர்கள் கைதாகினர்.

சந்தேகநபர்களிமிருந்து 3 போதைமாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் சந்தேகநபர்களாக 27 மற்றும் 25 வயதான இளைஞர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)

## பால்மா விலை இனி 1100/=

கொழும்பு, மார்ச் 19

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை 4.7 வீதத்தால் அதிகரிக்கப்படும் எனப் பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. ஏப்ரல் முதலாம் திகதி முதல் இந்த விலை அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது..

இதன்படி, இறக்குமதி செய்யப்படும் 400 கிராம் பால்மாப் பொதியின் விலை 50 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது. அதற்கமைய 400 கிராம் பால்மாப் பொதியின் புதிய விலை 1100 ரூபாவாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## பொலிஸ் அலுவலர் விபத்தில் படுகாயம்!

யாழ்ப்பாணம்,மார்ச் 19

மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து நேற்றுப் புதன்கிழமை காலை இடம்பெற்றது.

தெல்லிப்பழையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் அதே திசையில் பயணித்த மற்றொரு மோட்டார் சைக்கிளும் மோதியதில் இந்த விபத்துச் சம்பவித்துள்ளது. விபத்தில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார். சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-33-27.66)

## சுற்றுலாவிகள் 590,000+

கொழும்பு, மார்ச் 19

2025 ஆம் ஆண்டு மார்ச் 13 ஆம் திகதி வரை இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 5 இலட்சத்து 90 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது எனச் சுற்றுலா அதிகாரசபை சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)




ஆயிரம் குற்றவாளியள் தப்பினாலும் பரவாயில்லை ஒரு நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது எண்டு எல்லாரும் காலம் முழுக்கச் சொல்லிக் கொண்டிருக்கினமே தவிர, அதுக்கு மாறாத்தான் இஞ்ச எல்லாம் நடக்குது. யாழ்ப்பாணத்தில 'பிக் மட்ச்' நடத்திற பெரிய பள்ளிக்கூட மொண்டில இப்பிடியொரு சம்பவம் நடந்திருக்கு எண்டதுதான் ஆகப்பெரிய வேதனை. ஒழுக்கத்துக்குப் பேர் போன அந்தப் பள்ளிக்கூடத்தில படிக்கிற பெடியளில எப்பவும் சேர்மார் கடும் கண்காணிப்பா இருப்பினம். அப்பிடி இருக்காட்டி இப்பத்தைப்பிள்ளையள் உச்சிக்கொண்டு போடும். அதால கண்ணுக்கு எண்ணெய் விட்டபடிதான் அந்தப்பள்ளிக்கூட வாத்திமார் திரிவினம். எண்டாலும் அவையின்ர கண்ணிலயும் மண்ணைத்தூவிப்போட்டு, சில பெடியள் களவா 'ஈ - சிகரெட் பத்துகினம் எண்ட தகவலை ஒருமாதிரி பள்ளிக்கூடக்காரர் மணந்து பிடிச்சுப்போட்டினம். வெளிநாடுகளில இந்த ஈ-சிகரெட் தான் இப்ப பேமஸ். அதில நிக்கொட்டின் குறைவுதான். எண்டாலும் பள்ளிக்கூடப்பிள்ளையள் அதைப் பத்துறது பிழையெல்லோ. அந்தப் பள்ளிக்கூடத்துக்குள்ள ஈ-சிகரெட்டை ஆர் கொண்டுவாறது, ஆரெல்லாம் பத்துகினம், எங்க ஒளிச்சு வைச்சிருக்கினம் எண்ட தகவல் சரிவரத் தெரியாததால, சந்தேகப்படுறமாதிரி நடக்கிற பெடியளுக்குப் பின்னால வாத்திமார் வளையம் போட்டபடி இருந்திருக்கினம்.

ஒருநாள் அப்பிடி சந்தேக வளையத்துக்க இருந்த ஒரு பெடிப்பிள்ளை கையில இந்த ஈ- சிகரெட்டோட போறதை தற்செயலா ஒரு வாத்தியார் கண்டிட்டார். நைசா அவருக்குப் பின்னாலபோக நாலைஞ்சு பெடிப்பிள்ளையள் பாத்ரூமுக்குள்ள போய் அதைப் பத்திப்போட்டு வந்திருக்கினம். அப்பிடி ஈ சிகரெட்டைப் பத்தின பெடியளில ஒருத்தன், வாத்தியார் தங்களை 'நோட்' பண்றதைக் கண்டிட்டான். அவனும் விசயகாரன். ஈ-சிகரெட்டோட பிடிச்சாத்தானே பிரச்சினை எண்டிட்டு, ஒண்டுமே தெரியாத ஆள்மாதிரி ஏமலாந்தினபடி, தங்களுக்கு அடுத்த வகுப்புக்குள்ள போய், அங்க இருந்த பெடியன் ஒருத்தனிட்ட "இந்தா இந்த புகை லைற்றை வைச்சிரு. பேந்து வந்து எடுக்கிறன்" எண்டு ஈ - சிகரெட்டைக் குடுத்திட்டுப் போயிருக்கிறான். அந்த வகுப்புப்பெடியன் ஈ-சிகரெட்டை ஏதோ சுவிச்சை அமத்தினால், லைட் அடிச்சு புகை வாற விளையாட்டுச் சாமானாக்கும் எண்டு அதை எடுத்து அமத்திப் பார்த்திருக்கிறான். அவன்ர கெட்டகாலமோ என்னவோ கையில ஈ-சிகரெட்டை வைச்சிருக்கேக்க, அவனையும் வந்து வாத்திமார் பிடிச்சுப்போட்டினம். பிறகு அதை அறிவிக்கவேண்டிய இடங்களில அறிவிச்சு, எல்லாருக்கும் தண்டனையா சீர்திருத்தம் செய்ய "கவுன்ஸிலிங்குக்கு " அனுப்பி இருக்காம்.

பெரிய வகுப்புப் பெடியன்( ஒரு வகுப்புத்தான் கூட) தந்த ஈ-சிகரெட்டை வாங்கின குற்றத்துக்காக சின்னவகுப்புப் பெடியனும் 'கவுன்ஸிலிங் ' செய்யவேணுமெண்டு அனுப்பி இருக்கினம். ஊரிலையும், பள்ளிக்கூடத்திலையும் அந்தச் சின்ன வகுப்புப் பெடியனும் சிகரெட் பத்திப் பிடிபட்டவன் எண்டுதான் கதையாம். இதால அந்தச் சின்னப்பெடியன் இனிமேல் பள்ளிக்கூடம் போக மாட்டன் எண்டு தாய்க்குச் சொல்லி அழுதிருக்கிறான். பிழையளைத் திருத்தத்தான் வேணும். ஆனால் என்ன நடந்தது எண்டு தீர விசாரிக்காமல், தண்டனை குடுத்தால் அது இன்னும் பெரிய பிழையாப் போடும். இப்பிடி இவை இல்லாத பொல்லாத பழி சுமத்தினதால அந்தப் பெடியன் பள்ளிக்கூடமே போறதை நிறுத்திவிட்டால் அதுக்கு ஆர் பொறுப்பு? களை பிடுங்கிறம் எண்டிட்டு நெல்லையும் சேர்த்துப் பிடுங்கினால் கடைசியில ஒண்டுமே மிஞ்சாமல் போடுமெல்லோ

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். பிள்ளைகள் வழியில் வீண் செலவுகள் ஏற்படக்கூடும். வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது. தந்தை வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பணிச்சுமை அதிகரிக்கும்.

**இடபம்:** சற்றுச் சோர்வாக இருக்கும். பிற்பகலுக்கு மேல் உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்படும். உறவுகளால் ஆதாயம் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பணியாளர்களின் ஒத்துழைப்பால் கூடுதல் இலாபம் கிடைக்கும்.

**மிதுனம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முக்கிய முடிவுகளை எடுப்பதற்கு உகந்த நாள். அலுவலகத்தில் கூடுதல் பொறுப்பு வந்துசேரும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் சுமாராக இருக்கும்.

**கடகம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். திடீர்ச்செலவுகள் மனதைச் சஞ்சலப்படுத்தும். முக்கிய முடிவுகளை ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. பணிச்சுமை அதிகரிக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். அலுவலகத்தில் பணி நெருக்கடி குறையும். வியாபாரத்தில் சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும்.

**கன்னி:** எதிர்பாராத செலவுகள் ஏற்படும். ஆனால், போதுமான பணம் இருப்பதால் கடன்வாங்க வேண்டிய அவசியம் ஏற்படாது. மாலையில் வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். பணிச்சுமை இருந்தாலும் சமாளித்துவிடுவீர்கள்.

**துலாம்:** அதிர்ஷ்டகரமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை ஆதரவாக இருப்பார்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். நன்மை ஏற்படும்.

**தனுசு:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் விற்பனை வழக்கம் போலவே காணப்படும்.

**மகரம்:** எதிலும் சற்று பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் அனுசரித்துச் செல்லவும்.

**கும்பம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள் 2025 – 2027



## மிதுனம்

'வாக்கே வாழ்வு' என்ற கூற்றுப்படி எடுத்த காரியத்தையும், கொடுத்த வாக்கையும் காப்பாற்றும் ரிஷப ராசி அன்பர்களே! பணப்புழக்கம் தங்களிடம் தட்டுப்பாடின்றி இருக்கும். உங்களது உழைப்பால் மற்றவர்களை வாழவைப்பீர்கள். யார் உங்களிடம் வாக்குக் கொடுத்தாலும் அதன்படி அவர்கள் நடந்துகொள்ளாவிட்டால் உங்களுக்குக் கோபம்வரும். ஏனென்றால் நீங்கள் தன்மானம் நிறைந்தவர்கள். எந்தச் சூழ்நிலையிலும் அடுத்தவர் மனம் புண்படாதபடி பேசுவதில் வல்லவர் நீங்கள். இந்தச் சனிப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி இருக்கப்போகிறது என்பதைப் பார்ப்போம்.

இந்தச் சனிப்பெயர்ச்சியில் தேக ஆரோக்கியத்தில் கவனம்செலுத்தவேண்டிய சூழ்நிலை உருவாகும். இதனால் உங்களின் செயல்களைக் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க இயலாமலும் போகும்.



உங்கள் செயல்களை நேர்மையான பாதையில் செவ்வனே செய்து முடித்து அனைவரின் பாராட்டுகளையும் பெறுவீர்கள். பங்குச்சந்தை முதலீடு போன்ற இனங்கள் மூலம் திடீர்ப் பணவரவு உண்டாகும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்

உடலில் அவ்வப்போது சோர்வு உண்டாகும். போட்டிகளைச் சமாளிப்பீர்கள். கடினமான காரியங்களையும் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிப்பீர்கள். உங்களின் உடல் உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கும். புதிய திட்டங்களைத் தீட்டி வெற்றி பெறுவீர்கள். உங்கள் நடையில் மிடுக்கு உண்டாகும். அவ்வப்போது சிறு உடல் உபாதைகள் தோன்றி மறையும்.

மறைமுக எதிர்ப்புகள் ஏற்பட்டாலும் அவற்றை சாதுர்யமாகச் சமாளிக்க சனிபகவான் உதவுவார். சிலர் புதிய இல்லங்களுக்கு மாறுவார்கள். உங்களுக்கு பேராற்றல் உண்டாகும். புதிய தொழில் நுட்பங்களை அறிந்துகொள்வீர்கள்

**உத்யோகஸ்தர்கள்:** கடின உழைப்பைத் தாரக மந்திரமாகக் கொண்டு செயலாற்றவும். சோம்பலுக்கும் இடங்கொடுக்காமல் பணியாற்றினால் மேலதிகாரிகளின் ஆதரவை எளிதில் பெறலாம். எப்போதும் நிதானமாகவே பேசி சக ஊழியர்களின் அன்பைப் பெறவும். இதற்குப் பயனும் உண்டு. உங்கள் உடல் உழைப்புக்கு மேல் இரண்டு மடங்கு வருமானத்தைக் காண்பீர்கள். புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். பயணங்களும் பலன் தரும்.

**வியாபாரிகள்:** கொடுக்கல், வாங்கல் விஷயங்கள் சாதகமாக முடிவடைந்தாலும் உங்கள் செயல்களில் கூடுதல் அக்கறை காட்டவும். மற்றபடி சமுதாயத்தில் உங்கள் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். புதிய சந்தைகளைத் தேடிச் சென்று வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். புதிய முதலீடுகளையும் துணிந்துசெய்யலாம்.

**கலைத்துறையினருக்கு:** திறமைக்கேற்ற புகழும், கௌரவமும் கட்டாயம் கிடைக்கும். பண வரவில் முன்னேற்றம் உண்டாகும். நண்பர்கள் மூலம் தக்க சமயத்தில் தேவையான உதவிகளைப் பெறுவீர்கள். அமைதியாகச் செயலாற்றுவீர்கள். சில விரயங்களும் அவ்வப்போது உண்டாகும் என்பதால் சேமிப்பு விஷயங்களில் கவனமாக இருப்பது நல்லது.

**பெண்களுக்கு:** கணவருடனான ஒற்றுமை சுமாராகவே இருக்கும். அதேசமயம் குடும்பத்தில் உங்கள் பொறுப்புகளைத் தட்டிக்கழிக்காமல் நடந்துகொண்டு அமைதி காப்பீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளை நடத்துவீர்கள்.

**மாணவர்களுக்கு** புத்திசாலித்தனமாகச் செயற்படுவீர்கள். நல்ல மதிப்பெண்கள் பெறுவதற்கு வாய்ப்பு உண்டாகும். போட்டிகளில் பங்கேற்று பாராட்டைப்பெறுவீர்கள். உடற்பயிற்சிகளை மேற்கொண்டு சுறுசுறுப்புடன் காணப்படுவீர்கள். பெற்றோரின் அறிவுரைப்படி நடந்துகொண்டு மேலும் சிறப்படைவீர்கள்

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

கொடிகாமம் கொயிலாமனை அருள்மிகு கண்ணகை அம்பாள் வீரபத்திரர் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 9.38 மணிமுதல் 11.37 மணிவரை இடம்பெறவுள்ளது


கடந்த சனிக்கிழமை கர்மாரம்பத்துடன் ஆரம்பமாகி நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8மணி தொடக்கம் பிற்பகல் 3மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-41-159)

# முட்டிக்கத்தரிக்கு கிராக்கி

யாழ்ப்பாணம், மார்ச் 19

மட்டுவில் முட்டிக்கத்தரிக்காய்க்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. பங்குனித்திங்கள் உற்சவத்தின்போது பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்துக்கு வருகைதந்த பக்தர்கள் முட்டிக் கத்தரிக்காய்களை ஆர்வத்துடன் வாங்கிச்சென்றனர். ஒரு கிலோ முட்டிக்கத்தரிக்காய் 200 ரூபாவாக விற்கப்பட்டது. மட்டுவில் கிராமத்தில் பயிரிடப்படும் இந்தக் கத்தரிக்காய் பங்குனி மாதத்தில் அறுவடை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-25, 17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தொடர் பேச்சுகளில் அதானி திட்டங்கள்

கொழும்பு, மார்ச் 19

இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்கள் குறித்து அதானிக்கும் இலங்கை அரசுக்கும் இடையே தொடர்ந்தும் கலந்துரையாடல்கள் இடம் பெற்றுவருகின்றன என்று இந்தியாவில் "தி இந்து" ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தத் திட்டங்களின் கட்டணங்கள் தொடர்பாக பரஸ்பர உடன்பாட்டை எட்டுவதற்கு உரிய கலந்துரையாடல்கள் இடம்பெற்றுவருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார்- பூநகரி புதுப்பிக்கத்தக்க காற்றாலைத் திட்டத்தில் இருந்து கட்டணப்பிரச்சினை காரணமாக விலகுவதாக அதானி குழுமம் சமீபத்தில் எழுத்து பூர்வமாக அறிவித்திருந்தது.

ஆனால் குறித்த திட்டத்தை முற்றாக நிறுத்துவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என இந்திய ஊடகங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

கட்டணங்கள் தொடர்பாக பரஸ்பர உடன்பாடு ஏற்பட்ட பிறகு, ஜூன் மாதத்துக்குள் இந்தத் திட்டத்தின் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படக்கூடும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. ச-இ)

# பட்டலந்த அறிக்கையை வைத்து ரணிலை எதுவும் செய்யமுடியாது

## உதய கம்மன்பில தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 19**

**பட்டலந்த அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு ரணில் விக்கிரமசிங்கவைக் கைது செய்யவும் முடியாது, அவரது குடியுரிமையைப் பறிக்கவும் முடியாது என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-


பட்டலந்த விசாரணை ஆணைக் குழுவின் அறிக்கை 2001 மார்ச் 29 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. பட்டலந்தவில் உயிரிழந்தவர்களுக்கு நீதி வழங்கப்படும், ரணில் விக்கிரமசிங்க கைதுசெய்யப்படுவார், அவரின் குடியுரிமை பறிக்கப்படும் என ஜே.வி.பி. தலைவர்கள் அறிவிப்புகளை விடுத்துவருகின்றனர்.

பட்டலந்த அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு ரணிலைக் கைதுசெய்வதற்கும், அவரின் குடியுரிமையைப் பறிப்பதற்கும் அறிக்கையில் அடிப்படை காரணிகள் இல்லை. கருத்துகளை திரட்ட மட்டுமே மேற்படி ஆணைக்குழுவால் முடியும். தண்டனை வழங்குவதற்குரிய நீதிமன்ற அதிகாரம் அதற்குக் கிடையாது. பட்டலந்த அறிக்கையில் ரணில் விக்கிரமசிங்க குற்றவாளியாக்கப்படவில்லை.

அவரின் குடியுரிமையைப் பறிப்பதற்குரிய பரிந்துரையும் இல்லை. அறிக்கையை வாசித்துப் பார்க்காததாலேயே ஜே.வி.பி.யினர் இவ்வாறான கருத்துகளை முன்வைத்து வருகின்றனர் - என்றார். (எ-44)

# பட்டலந்தவில் பாதிக்கப்பட்டோர் சாட்சியமளிக்கத் தயார்

## ரில்வின் சில்வா தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 19

1988-89ஆம் ஆண்டு காலப்பகுதியில் பட்டலந்த சித்திரவதை முகாமில் சித்திரவதை செய்யப்பட்ட ஏராளமானோர் சாட்சியமளிக்கத் தயாராக உள்ளனர் என்று ஜே.வி.பி. பொதுச் செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நான் சட்டத்துக்காகப் பணியாற்றுகிறேன். எவரையும் அவதூறு செய்ய விரும்பவில்லை. இந்த சித்திரவதை முகாம் சம்பவத்தில் தொடர்புடைய பலர் எதிர்காலத்தில் சட்டத்தின் கீழ் தண்டனையை எதிர்கொள்ளவேண்டியிருக்கும்- என்றார். (எ-இ)



# போலி ஆவணங்களை வைத்தே தையிட்டி மக்கள் போராட்டமாம்

## பெரமுன கண்டுபிடிப்பு

கொழும்பு, மார்ச் 19

தையிட்டி விகாரையை அண்மித்த பகுதிகளில் வசிப்பவர்கள் போலியான ஆவணங்களை முன்னிலைப்படுத்திப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். தையிட்டி விகாரைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசாங்கம் விசேட குழுவொன்றை நியமிக்கவேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சானக சம்பத் மதுகொட நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளார்.


அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மத நல்லிணக்கம் தொடர்பில் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். ஆனால் அதற்கான திட்டங்களைக் குறிப்பிடவில்லை. மதத் தலங்களை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு.

யாழ்ப்பாணம் திஸ்ஸ விகாரை பிரச்சினைக்கு இதுவரையில் உறுதியான தீர்வு முன்வைக்கப்படவில்லை. இந்த விகாரை 1956 ஆம் ஆண்டு நகரத் திட்ட வரைபடத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. விகாரையை அண்மித்த பகுதியில் உள்ளவர்கள் உரிமை கோருவதற்காக போலியான ஆவணங்களை முன்னிலைப்படுத்திப் போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு அரசாங்கம் விசேட குழுவை நியமிக்கவேண்டும். விகாரையை அண்மித்த பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் குடியிருப்பவர்களை அகற்றவேண்டும். இந்தப் பிரச்சினைக்கு முரண்பாடற்ற வகையில் தீர்வு காணவேண்டும்.

முல்லைத்தீவு குருந்தூர் மலையிலும் இதே பிரச்சினை காணப்படுகிறது. நீதிமன்ற உத்தரவால் ஆராய்ச்சிப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான செயற்பாடுகள் பௌத்தமத தொல்பொருள் சின்னங்கள் அழிவடைவதற்கு காரணியாக அமையும்.

வடக்கு மாகாணத்தில் 600 இடங்கள் தொல்பொருள் மையங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இந்த இடங்களை வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரித்து, தொல்பொருள் சின்னங்களை பாதுகாக்கவேண்டும் -என்றார். (எ-இ)




# மதிலுடன் மோதி கார் விபத்து

யாழ்ப்பாணம், மார்ச் 19

கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று வீதியோரத்தில் உள்ள மாதா கோவிலின் மதிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தில் எவருக்கும் காயங்களும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவில் இருந்துவந்த பெண் ஒருவர், அவரது கணவர் மற்றும் 5 வயது மதிக்கத்தக்க பெண் குழந்தை ஆகியோர் பயணித்த காரே இவ்வாறு விபத்தில் சிக்கியது. (ச-3327)



# தமிழரசிலிருந்து வெளியேறும் வடமராட்சி உறுப்பினர்

யாழ்ப்பாணம், மார்ச் 19

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தின் பிரதான செயற்பாட்டாளர் பி.அலஸ்ரின் (றஜனி) இலங்கைத் தமிழரசுக் கட்சியை விட்டு விலகுவதாக அறிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ முகநூல் பதிவின் ஊடாகவே அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். எதிர்வரும் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் முள்ளியான் வட்டாரத்தில் வேட்பாளரை நிறுத்துவது தொடர்பாக எழுந்த முரண்பாடே அலஸ்ரின் தமிழரசுக் கட்சியை விட்டு வெளியேறுவதற்கான காரணமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19.03.2025 புதன்கிழமை

## தோட்ட வேலையாள் தேவை

தோட்ட வேலைகளை தங்கிநின்று செய்வதற்கு 45 - 50 வயதிற்குட்பட்ட வேலையாள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 977 3286**

## சாரதி தேவை

தாவடி, கொக்குவிலில் இயங்கிவரும் பிரபல்யமான அரிசியாலை ஒன்றிற்கு சாரதி தேவை. (பாரவூர்தி சாரதி)


(CS/57726) J-1

**076 096 9728**

## பட்டமளிப்பு விழா சேவைகளுக்கு கட்டுப்பாடு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 39 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா ஆரம்பமாகியுள்ள நிலையில் பொதுப் பட்டமளிப்பு விழாவையொட்டி புகைப்பட சேவை, பொருள்கள் விற்பனை போன்ற சேவைகளை வழங்கவிரும்பும் அனைவரும் முன்னைய அனுமதி பெறுவது கட்டாயம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திடம் அனுமதிபெற்ற பிறகே தங்களுடைய சேவைகளை முன்னெடுக்கமுடியும். முன் அனுமதி பெறாமல் ஏதேனும் விற்பனை களோ, சேவைகளோ முன்னெடுக்கப்பட்டால் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (ச-66)



நயினாதீவு பெருங்குளம் ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்பாள் ஆலய மஹோற்சவப் பெருவிழா பங்குனித்திங்கள் திருநாளான நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (ச-25,66)

## பணியாளர் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் தனியார் நிதி நிறுவனத்திற்கு 25 - 30 வயதிற்குட்பட்ட ஆண்/பெண் பணியாளர்கள் தேவை. சாவகச்சேரியை அண்டிய பிரதேசத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

(CS/57766) J-1

**076 604 8878**

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 75 ரூபா
நிலம் இழுத்துப் பதிக்க - 100 ரூபா

**077 334 1281**

## வீடு வாடகைக்கு தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு இருபாலை, கல்வியங்காடு, திருநெல்வேலி, இராஜவீதி ஆகிய இடங்களில் வீடு வாடகைக்குத் தேவை.

(CS 57770) N-1

**077 9590 793**

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

### பிரதேசசபை கடைகள் வாடகைக்கு வழங்குதல் தொடர்பான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உடுவில் உப அலுவலகத்திற்குட்பட்ட இணுவில் சந்தைப்பகுதியில் சபை நிதியில் அமைக்கப்பட்ட கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்படும் கடையினை 21.04.2025ம் திகதி முதல் வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக்கூடிய ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 20.03.2025 – 02.04.2025 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி - 03.04.2025 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 03.04.2025 வியாழக்கிழமை பி.ப 2.30 மணிக்கு
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் - வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம்

| விபரம் | பரப்பளவு (சதுரஅடி) | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ஒருங்கிணைந்த கட்டுப்பணம்) | மாத வாடகை | கேள்விப் பத்திர கட்டணம் | கேள்வி வைப்பு மீளளிக்கக் கூடியது |
|---|---|---|---|---|---|
| மேற்தளம் | | | | | |
| கடை இல - 01 | 405 | 1,920,000.00 | 8,000.00 | 2,000.00 | 40,000.00 |

**நிபந்தனைகள்:-**

1. விண்ணப்பதாரி வலிகாமம் தெற்கு பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
2. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கிராம சேவகரால் உறுதிப்படுத்திய கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்க வேண்டும்.
3. கேள்விப்படிவங்களைப் பெற்றுக்கொள்வோர் மூலப்பிரதி. இணைப்பிரதி ஆகிய இரண்டினையும் பூரணப்படுத்தி தமது கேள்விகளை தனித்தனி கடித உறையில் இட்டு **"செயலாளர் வலிகாமம் தெற்கு பிரதேச சபை. சுன்னாகம்"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக குறிப்பிட்டு மூலப்பிரதி. இணைப்பிரதி எனக் குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும்.
4. மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்த வேண்டும். குறித்த மாத வாடகை பணத்தினை ஒவ்வொரு மாதம் 31ம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான மாதக்கட்டணத்துடன் மாதக்கட்டணத்தின் 10 வீதம் தண்டமாக அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.
5. கேள்விச்சித்திகாரராக தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் 17.04.2025ம் திகதிக்கு முன்னர் ஒருங்கிணைந்த கட்டுப்பணம் முழுத்தொகையையும் ஒரேதடவையில் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரு வாரத்திற்குள் பிரதேசசபையிடம் உரிய வியாபாரத்திற்கான வியாபார உரிமத்தினை பெற்று வியாபாரம் / தொழில் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.
6. சித்தி பெறும் கேள்விதாரர் சந்தையில் விற்பனை செய்யப்படும் பொருட்களையோ அல்லது பிரதேசசபையால் அங்கீகரிக்கப்படாத பொருள்களை விற்பனை செய்வதோடு மதுபானவகைகளோ. போதை வஸ்துக்களோ அல்லது தடைசெய்யப்பட்ட வேறு எந்தபொருள்களையோ விற்பனை செய்வது தடை செய்யப்படுவதுடன். கடைக்கட்டடம் வேறு எந்த சட்ட விரோத நடவடிக்கைகளுக்கும் பாவித்தல் கூடாது.
7. சித்திகர குத்தகைதாரர் வலிகாமம் தெற்கு பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
8. சித்திகர குத்தகைகாரர் பாதுகாப்பு வைப்பு பணமாக 03 மாத வாடகை தொகையினை முற்பணமாக செலுத்த வேண்டும்.
9. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிம சான்றிதழையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
10. கேள்விப்பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
11. மேலதிக விபரங்களை வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**திரு அ.பிரதீபன்,**
**செயலாளர்**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**

**19.03.2025**

(CR/44604) (N-1)

## யாழ்ப்பாணம் மாநகர சபை
### கேள்வி அறிவித்தல்
### கழிவுப் பொருட்கள் ஏற்றுமதி - 2025

யாழ் மாநகரசபை ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் தரம் பிரிக்கப்பட்ட கழிவுப்பொருட்களை ஏற்றுமதி செய்யும் வழங்குனரிடமிருந்து யாழ் மாநகரசபை பெறுகைக்குழு தலைவரால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் விண்ணப்பங்களை யாழ் மாநகரசபையின் கொள்வனவுப் பகுதியில் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கேள்விப் படிவங்களை 19.03.2025 ஆம் திகதி முதல் 02.04.2025 ஆம் திகதி பி.ப 2.30 மணி வரையான காலப்பகுதியில் கடமை நாட்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2000.00 * Vat 18% பணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

குறித்த சேவை தொடர்பான விபரங்களை அலுவலக நாட்களில் யாழ் மாநகரசபையின் பொதுச்சுகாதாரப் பொறியியல் பிரிவில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் படிவங்களை 02.04.2025 ஆம் திகதி பி.ப 02.30 மணிக்கு முன்னர் தலைவர் பெறுகைக்குழு மாநகரசபை யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால்மூலமாகவோ அல்லது யாழ் மாநகரசபை அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியினுள் இடுதல் மூலமோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப்படிவங்கள் கேள்விச் சபையால் நிராகரிக்கப்படும்.

கேள்வி திறத்தல் 02.04.2025 ஆம் திகதி பி.ப 03.00 மணிக்கு கேள்விதாரர் அல்லது பிரதி நிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். எந்தவொரு கேள்வியையும் நிராகரிக்கும் உரிமை கேள்விச் சபைக்குரியதாகும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

(CR/44603) J-1

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 14.03.1936 மறைவு 25.03.2019

**அமரர் செல்லையா இராசலிங்கம்**

**திதி: அபரபக்ஷ பஞ்சமி**

விழிகளும் உன்னைத் தேட
விடியல் பல தனித்து ஓட
வழிகளும் ஏதும் உண்டோ
வையகம் நீ மீண்டும் காண
ஆண்டுகள் ஆறு போகும்
அகிலமும் உருண்டு போகும்
இன்று உம்மோடு அம்மாவையும் இழந்து
தவிக்கின்றோம் உங்கள் நினைவுகளோடு.....

**ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!**

உங்கள் நினைவுகளோடு வாழும்..
**குடும்பத்தினர்**

**கல்வியங்காடு.**

(CS/57763) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

அவநம்பிக்கை பலவீனத்துக்குவி வழிவகுக்கிறது;
நம்பிக்கை ஆற்றலுக்கு வழிவகுக்கிறது.

—வில்லியம் ஜேம்ஸ்—

# வலைகளில் சிக்குண்ட தமிழினம்

**தொ**ழில்நுட்பம் வளர்ந்துள்ள இன்றைய காலகட்டத்தில் பொழுதுபோக்காக நாம் பயன்படுத்த ஆரம்பித்த சமூக வலைத்தளங்கள் எம்மை அடிமையாக்கி, ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. பெரும்பாலானவர்கள் இப்போது சமூகவலைத்தளங்களில் வெளியாகும் தகவல்களின் அடிப்படையிலேயே தங்களின் சிந்தனையைத் திசைப்படுத்த ஆரம்பித்திருக்கின்றனர். இவ்வாறான உண்மைகளை ஆராய்ந்து அறிந்துகொள்ளமுயலாத - சமூகவலைத்தளப் பதிவுகளுக்குள் மூழ்கியிருக்கும் மக்களின் மனப்பாங்கே சமூகத்தில் மோசடிகளுக்கும், தவறான நடத்தைகளுக்கும் வழிவகுகின்றது. ஆரோக்கியமற்ற இந்த நிலைமைக்குள் தமிழ்மக்களும் பெரிதும் அமிழ்ந்திருக்கின்றனர். இப்போதுள்ள தொழில்நுட்பங்களால் 'ஸ்மார்ட்' கைபேசி வைத்திருக்கும் ஒவ்வொருவரும் சமூகவலைத்தளப் பதிவேற்றங்கள் ஊடாக தங்களின் கருத்துகளை வெளிப்படுத்தும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. கருத்துவெளியிடும் சுதந்திரத்துக்கு இது ஒரு வரப்பிரசாதம் என்பதை ஏற்றுக்கொள்ளும் அதேநேரம், ஒவ்வொருவரும் தாம் வெளிப்படுத்தும் கருத்து களை சமூக அக்கறையுடன், நெறிமுறைகளுடன் வெளிப் படுத்துகின்றார்களா என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது. எவ்விதமான கட்டுப்பாடுகளோ - பொறுப்புக்கூறுவதற்கானகட்டாயமோஇல்லாத சமூகவலைத்தளங்களில் வெளிப்படுத்தப்படும் தான்தோன்றித்தனமான தகவல்கள், அவற்றால் ஏற்படுத்தப்படும் கருத்துருவாக்கம் நிச்சயம் சமூகத்தில் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த சில ஆண்டுகளாக சமூகவலைத்தளங்களின் ஆதிக்கம் அபிருத்தி, அரசியல் என அனைத்துத் திசைகளிலும் பங்கெடுத்திருப்பதை அவதானிக்கமுடிந்திருக்கின்றது. சமூக வலைத்தளங்கள், இணையத்தளங்களை இறுக்கமாகக் கண்காணிக்கும் சட்ட ஏற்பாடுகள் இல்லாத எம்நாட்டில் இந்த சமூகவலைத்தளப் பயன்பாடு சமூகத்துக்கு ஆபத்தானதாகவே மாறியிருக்கின்றது. சமூகவலைத்தளங்களின் ஊடாக எவரும் எதையும் கூறலாம், சேறடிப்புகளைச் செய்யலாம், நன்மதிப்பைச் சிதறடிக்கலாம் என்கின்ற நிலைமை சமூகத்தில் மறைமுகமாகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது மறுக்க முடியாது. உதவிகள் என்கின்ற பெயரில் நடப்பதாகக் கூறப்படும் மோசடிகள், தனிநபர்கள் மீது தொடுக்கப்படும் அவதூறுகள், ஆதாரங்கள் அற்ற தகவல்களைப் பகிரங்கப் படுத்தல் என்பவற்றுக்கு சட்டத்தில் இருக்கும் ஓட்டைகளும், இணையக்குற்றங்கள் தொடர்பாக இலங்கையில் எடுக்கப்படும் ஆமைவேக நடவடிக்கைகளுமே காரணமாகவிருக்கின்றன. வடக்கு, கிழக்கில் அண்மைக்காலமாக நடக்கும் சம்பவங்கள் சமூகவலைத்தளங்களைக்கொண்டு மக்களின் மனங்களை மாற்றும், பணத்தை மோசடி செய்யும் பெரும் மாபியாக்கும்பல்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இயங்குவதையே வெளிப்படுத்தியிருக்கின்றன.

இந்த நிலைமை ஆபத்தான கட்டத்துக்கு நகர முன்னர் சமூகவலைத்தளங்கள் மற்றும் இணையத்தளங்களைக் கட்டுப்படுத்துவதற்கான சட்ட ஏற்பாடுகளை - கருத்துச் சுதந்திரம் பாதிக்காத வகையில் - எடுக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமை. அதேநேரம் சமூக வலைத்தளங்களில் தங்களை ஊடகவியலாளர்கள் என்று அறிமுகப்படுத்திக் கொண்டு சமூகங்கள் தொடர்பாக -பொதுமக்கள் தொடர்பாக- பொதுப்பிரச்சினை தொடர்பாகப்பதிவேற்றுபவர்கள் உரிய பயிற்சிகளை -நெறிமுறைகளைக் கற்றிருப்பதை உறுதிப்படுத்த வேண்டியதும், அவர்களுக்கான ஒரு பொறுப்புக்கூறல் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டியதும் கட்டாயம். இவ்வாறான ஏற்பாடுகளே சமூகவலைத்தளங்களின் பயன்பாட்டை ஆரோக்கியமான பாதைக்கு இட்டுச்செல்லும்.



## இவ்வருடத்தில் இதுவரை
# ரூ. 2.3 ட்ரில்லியன் கடன் வாங்கிய அரசு

கொழும்பு, மார்ச் 19
இந்த வருடத்தில் இதுவரை அரசாங்கம் 2.3 ட்ரில்லியன் ரூபாவைக் கடனாகப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் மூலம் அரசாங்கம் இந்தக் கடனைப் பெற்றுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன.
கடந்த ஜனவரி மாதம் மாத்திரம் ஒரு ட்ரில்லியன் ரூபாவைக் கடனாகப் பெற்றுள்ளது. கடந்த பெப்ரவரி மாதத்தில் அரசாங்கம் 750 பில்லியன் ரூபாவைக் கடனாகப் பெற்றுள்ளது.
இந்த மாதத்தின் கடந்த 14 நாள்களில் அரசாங்கம் 580 பில்லியன் ரூபாவைக் கடனாகப் பெற்றுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. (ச-இ)




# 25 துப்பாக்கிச்சூடுகள்

கொழும்பு, மார்ச் 19
இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 25 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அவற்றில் 16 சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் 11 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸாரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# யாழில் கட்டுப்பணம் செலுத்திய ஐ.ம.சக்தி

யாழ்ப்பாணம், மார்ச் 19
யாழ்ப்பாணத்தில் உள்ள 17 சபைகளிலும் போட்டியிடுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி நேற்றுமுன்தினம் கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.
கட்சியின் பிரதிச் செயலாளரும், யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளருமான உமா சந்திரபிரகாஸ் யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளார். (எ-125)



# பச்சை குத்தினால் பொலிஸில் வேலையில்லை

கொழும்பு, மார்ச் 19
இலங்கைச் சட்டங்களின்படி உடலில் பச்சை குத்திய ஒருவரைப் பொலிஸ் சேவையிலோ அல்லது ஏனைய முப்படைகளிலோ இணைத்துக்கொள்ளமுடியாது என்று பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். மக்கள் சந்திப்பு ஒன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். உடலில் பிரதான பாகங்களில் தோலும் ஒன்றாகும். உங்களின் சருமத்தை நீங்களே அழித்துக்கொள்வது நல்லதல்ல என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-6)


# இந்திய மீனவர்கள் மூவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 19
சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீன்பிடிப் படகொன்றுடன் இந்திய மீனவர்கள் மூவர் கடற்படையினரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் நெடுந்தீவுக்கு அண்மித்த கடற்பகுதியில் அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் மூவரும் சட்ட நடவடிக்கைகளுக்காக காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அழைத்துவரப்பட்டு யாழ்.மயிலடி மீன்பிடிப் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## சதாசிவம் பாலசுப்ரமணியம்

யாழ். ஆறுகால்மடத்தை பிறப்பிடமாகவும் பொன்னையா வீதி 'சௌமிய பவனத்தை' வசிப்பிடமாகவும் தற்போது Stavanger, Norwayஐ வாழ்விடமாகவும் கொண்ட முன்னாள் உரிமையாளர் Balachandra Motor Trade - Stanley Road, Jaffna, Thangam Fancy Store - Chavakachery. Eastern Lanka Ltd - Main street, Tricomelee, மற்றும் தற்போதைய Keventh ImpEx - Trichy India & Colombo 13 ஆகிய ஸ்தாபனங்களின் உரிமையாளராகிய திரு. சதாசிவம் பாலசுப்ரமணியம் அவர்கள் 14.03.2025 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - தங்கரெத்தினம் தம்பதியின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - தங்கம்மா தம்பதியின் மருமகனும், தவமணி அவர்களின் கணவரும், தவராசா அவர்களின் மைத்துனரும், இன்பராணியின் சகோதரரும், பாலச்சந்திரா, பாலரஞ்சன், பாலதனுஷன், பாலமுகுந்தன் ஆகியோரின் தந்தையும், யசிந்தா, ரம்யா, கவிப்பிரியா, ஶ்ரீபிரியா மற்றும் பார்த்தீபன், பார்த்தீபா, பானுதீபன் ஆகியோரின் மாமனாரும், சுபிகரன், அனுஷாலா, அயோத்தியா ஆகியோரின் பெரியப்பாவும், கெவிந், லக்சியா, ரோஹித், ரஜித், ராகா, நவீன், நிதுரா, நிதிஸ், அம்றிரா, அவந்திகா மற்றும் ரித்திக், விஹான், அத்விக் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரிகைகள் நாளை மறுதினம் (21.03.2025) வெள்ளிக்கிழமை அன்று 09.00 மணிக்கு Tjensvoll kapell (Stavanger, Norway) இல் ஆரம்பமாகி தகனத்திற்காக 10.45 மணியளவில் Eiganes krematorium இற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிறப்பு 31.01.1944 | இறப்பு 14.03.2025

தொடர்புகளுக்கு :
தவராசா - 00 44 7990319118 UK
பாலச்சந்திரா - 00 47 93017342 Norway
பாலரஞ்சன் - 00 47 92042485 Norway
பாலதனுசன் - 00 44 7951250549 UK
பாலமுகுந்தன் - 00 44 7466589408 UK

தகவல் : குடும்பத்தினர்

(CR/44602) J-1

# 2022ஆம் ஆண்டு நெருக்கடியில் இலங்கையைக் கைவிட்டது சீனா

### இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 19**

**2022ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட போது சீனா கைகொடுக்கும் என்ற நம்பிக்கை அரசாங்கத்திடம் இருந்தது. ஆனால் சீன மக்கள் வங்கி எமக்கு வழங்கிய கடனில் ஒரு சதத்தைக்கூட அதிகரிக்க முடியாது எனக் கைவிரித்து விட்டது என்று இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசாமி தெரிவித்துள்ளார்.**



"இலங்கையின் பொருளாதாரம் கடந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம்" என்ற தலைப்பில் இலங்கை மத்திய வங்கியின் 75ஆவது ஆண்டு விழாவில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் தேர்தல் என்பது இல்லாத வளங்களை ஏலம்விடுவது என சிங்கப்பூரின்முன்னாள் பிரதமர் லீ குவான்யூ தெரிவித்துள்ளார். தேர்தலை மையப்படுத்திய இலவசங்களே இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு காரணம். இதுவே பணவீக்கம் அதிகரிப்பதற்கும், நாணயப் பெறுமதி குறைவதற்கும் வழியேற்படுத்தியது. அரசாங்கங்களின் தவறான திட்டமிடல்களும் பொருளாதார நெருக்கடிக்குக் காணரம்.

பொருளாதார நிலைத்தன்மையை ஏற்படுத்துவது சவாலான விடயம். 2000ஆம் ஆண்டு 35 சதவீதமாக இருந்த உள்நாட்டு உற்பத்தி இப்போது 20 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கையில் தரமான திட்டமிடல்கள் உள்ளபோதும், அவற்றை நடைமுறைப்படுத்துவதில் தடைகள் ஏற்படுத்தப்படுகின்றன. மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு அரச தொழிற்சங்கங்கள் தடையாக உள்ளன.

இலங்கையில்நீடித்துநிற்கக்கூடிய திட்டமிடல்கள் எமக்குத் தேவை. தவறான திட்டமிடல்களில் இருந்து நாடு விடுபடுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

அரசியல் தலையீடுகளில் இருந்து திட்டங்கள் பாதுகாக்கப்படவேண்டும். நாட்டைநிலைப்படுத்துவதற்கு கடினமான சவால்கள் எம்முன் உள்ளன. நாம் கடினமாக உழைக்க வேண்டும்-என்றார். (எ-6)

### ஐ.ம.சக்தியில்

# தவிசாளர் பதவியை துறந்தார் மரிக்கார்

கொழும்பு, மார்ச் 19

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் இம்தியாஸ் பக்கீர் மார்கர் தனது தவிசாளர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

தனது பதவிவிலகல் கடிதத்தை கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு அனுப்பிவைத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தவிசாளர் பதவியிலிருந்து விலகினாலும், ஐக்கிய மக்கள் சக்தியில் தொடர்ந்து பயணிப்பேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

### சஞ்சீவ கொலை:

# கைதான சிறையதிகாரி விளக்கமறியலில்

கொழும்பு, மார்ச் 19

கணேமுல்ல சஞ்சீவ கொலைச் சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட பூஸா சிறைச்சாலை அதிகாரி ஒருவரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் நேற்று கொழும்பு மேலதிக நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சம்பவ தினத்தன்று சந்தேகநபரான கணேமுல்ல சஞ்சீவவை குறித்த சிறைச்சாலை அதிகாரியே நீதிமன்றத்துக்கு அழைத்துவந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கப்ருக முதலீட்டுக் கடன் திட்டம்

தென்னை வளர்ச்சியை அதிகரிப்பதன் மூலமாக, தேசிய தென்னை உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில், இலங்கை வங்கியும் தென்னை உற்பத்தி சபையும் ஒன்றிணைந்து, நடைமுறைப்படுத்துகின்ற இக் கடன் திட்டத்தின் ஊடாக 8% நிலையான வருடாந்த வட்டி வீதத்தின் கீழ், ஆகக்கூடியது ரூ.5 மில்லியன் வரையான நிதி வசதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

60 மாத மீள் செலுத்தல் காலம்
(12 மாத கடன் சலுகைக் காலம் உட்பட)

முறையாக கடனை மீள் செலுத்தும் பயனாளிகளுக்கு செலுத்திய வட்டித் தொகையானது திருப்பித் தரப்படும்.

*நிபந்தனைகளுக்குட்பட்டது

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரியை அரசு பகிரங்கப்படுத்தவேண்டும்

## வலியுறுத்துகின்றார் ரோஹித அபேகுணவர்த்தன

**கொழும்பு, மார்ச் 19**

**உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியை அரசாங்கம் பகிரங்கப்படுத்தவேண்டும். இந்த விவகாரத்தை அடுத்த அரசாங்கத்துக்கு பொறுப்பாக்கக்கூடாது என்று புதிய ஜனநாயக முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது இலங்கையில் மூவின மக்களும் வாழ்கிறார்கள். அனைத்து இனத்தவர்களின் மத சுதந்திரங்களும் உறுதிப்படுத்தப்படவேண்டுமாயின் இலங்கையர் என்ற அபிமானம் உறுதிப்படுத்தப்படவேண்டும். அதற்கு அரசாங்கம் விசேட திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும்.

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொண்டு உண்மையான சூத்திரதாரியை பகிரங்கப்படுத்தவேண்டும் என்று கத்தோலிக்க சபை தொடர்ச்சியாக வலியுறுத்துகிறது.

குண்டுத்தாக்குதல் சம்பவத்தால் கத்தோலிக்கர்கள் மாத்திரமல்ல, முஸ்லிம்களும் பாதிக்கப்பட்டார்கள்.

முஸ்லிம் சமூகத்தினர் வீதிக்கு இறங்க முடியாதநிலைகாணப்பட்டது. அனைத்து முஸ்லிம்களும் குண்டுத்தாக்குதல்தாரிகளைப் போன்று தவறான கண்ணோட்டத்தில் பார்க்கப்பட்டார்கள். அவர்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும்.

மிலேச்சத்தனமான தாக்குதலை நடத்திய பிரதான சூத்திரதாரியை பகிரங்கப்படுத்தி கடுமையான தண்டனை வழங்குங்கள். அதற்கு நாங்களும் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் - என்றார். (எ-இ)

## இரு சபைகளில் போட்டியிடும் பெரமுன

யாழ்ப்பாணம், மார்ச் 19

சிறீலங்கா பொதுஜன பெரமுன யாழ்ப்பாணத்தில் இரு சபைகளில் போட்டியிடுவதற்கு நேற்றுமுன்தினம் கட்டுப்பணம் செலுத்தியுள்ளது. பொதுஜன பெரமுனவின் யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளர் கா.கீதநாத் யாழ். மாநகரசபை மற்றும் பருத்தித்துறை நகரசபை ஆகியவற்றுக்கான கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளார். (எ-125)

## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், மார்ச்.19

அமரர்.பொன்னம்பலம் நீதிராஜா ஞாபகார்த்தமாக வல்வெட்டித்துறை இரத்ததான சங்கம் மற்றும் வல்வெட்டித்துறைப் பிரதேச மருத்துவமனை நலன்புரிச் சங்கம் இணைந்து ஏற்பாடுசெய்து நடத்திய மாபெரும் குருதிக்கொடை முகாம் நிகழ்வு கணபதி மஹால் திருமண மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2.45 மணி வரை நடைபெற்றது. குருதிக்கொடை வழங்கிய அனைவருக்கும் சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டன. (ச-22,66)





## பங்குனித்திங்கள் பாற்குடப்பவனி

யாழ்ப்பாணம், மார்ச் 18

நுணாவிற்குளம் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பங்குனி முதலாம் திங்கள் விரதம் நுணாவில் மேற்கு பக்த அடியார்களின் காவடி மற்றும் பாற்குடப் பவனியுடன் ஆரம்பமாகியுள்ளது.

வருடந்தோறும் பங்குனி முதற் திங்களில் நுணாவில் மேற்குப் பிரதேச அடியவர்கள் கொல்லங்கிராய் வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இருந்து காவடி மற்றும் பாற்குடத்துடன் நடைபவனியாக, நுணாவிற்குளம் கண்ணகை அம்மன் ஆலயத்தை வந்தடைவர். கொண்டுவரும் பாலினால் அம்மனுக்கு அபிஷேகம் செய்து பங்குனித்திங்கள் விரதத்தை ஆரம்பித்து வைப்பதுதொன்று தொட்டு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-25,28)

## கிரீடா சக்தி அணியில் கன்னியர்மடம் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 19

இலங்கை கிரீடா சக்தி கூடைப்பந்தாட்ட அணியில் யாழ். திருக்குடும்ப கன்னியர்மட அணியைச் சேர்ந்த 4 மாணவிகள் இணைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு புளூஸ் கூடைப்பந்தாட்டத்திடலில் கடந்த மாதம் இடம்பெற்ற கூடைப்பந்தாட்டப் போட்டியின் போதே இந்தத்தெரிவு இடம்பெற்றுள்ளது. யாழ். திருக்குடும்ப கன்னியர்மட அணியைச் சேர்ந்த சகானா விஜருபன், எஸ்தார் ஜாக்சன், டிலான் காசில்டா, ஆர். லோட்சி ஆகியோரே தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ச-25,125)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> வெற்றியாளர்கள் கடின உழைப்பை வெற்றியாக மாற்றக்கூடியவர்கள், தோல்வியடைந்தவர்களோ அதைத் தண்டனையாகப் பார்ப்பவர்கள்.
>
> - லூ ஹோல்ட்ச்


புதன் பொய்கை

19.03.2025
புதன்கிழமை

■ எஸ்.ஆர்.லெம்பேட்

# சிற்பம், கவிதை, ஓவியம் மூன்றும் சேரும் ஓரிடம்...

வடமாகாணத்தின் இளைஞர்கள் மத்தியில் கலைத்துறை சார்ந்த ஈர்ப்பும், அது சார்ந்த செயற்பாடும் அதிகரித்துவருகின்றது என்பதை எவராலும் மறுக்க முடியாது. குறிப்பாக அண்மைக்காலங்களாக ஓவியம், சிற்பம், நடனம், இசை போன்ற துறைகளில் இளைஞர்களின் பங்களிப்பும், படைப்புக்களும் பெரிய அரங்குகளைக்கூட அலங்கரிப்பனவாக மாறியுள்ளன.

இவ்வாறான பின்னணியில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த யாழ்.பல்கலைக்கழக மாணவன் கமலரூபன் உருவாக்கியுள்ள கலைப் படைப்புக்களும், அவருடைய கலைத்துறை சார்ந்த செயற்பாடுகளும் பலரையும் கவர்ந்துள்ளன. வடக்கில் பெயர்சொல்லும் ஓர் அற்புதமான கலைஞராக கமலரூபன் மாறிவருகின்றார் என்றால், அது மிகையில்லை.



ஒரு காண்பியக் கண்காட்சியை நடத்தும் அளவுக்கு அதிகமான ஓவியங்கள், சிற்பங்கள் மற்றும் இதர கலைப்படைப்புக்களை கமலரூபன் உருவாக்கிவைத்துள்ளார். தனது பல்கலைக்கழகக் கல்விச் செயற்பாடுளின்போதும், தனது ஓய்வுக்காலங்களின் போதும் அவர் உருவாக்கியுள்ள இந்தச் சிற்பங்கள் உண்மையில் மெய்சிலிர்க்க வைப்பனவாக அமைந்துள்ளன.

கிளிநொச்சியில் மிகவும் சாதாரண பின்னணியைக் கொண்ட குடும்பத்தில் பிறந்தவர்தான் கமலரூபன். அவரின் இரு அண்ணன்கள் இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டனர். தந்தை ஒரு தச்சுத் தொழிலாளி. இவ்வாறான ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்திருந்தபோதிலும் கல்வியில் சிறந்த பெறுபேற்றைப் பெற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சென்றார்.

அவருடைய தந்தை ஒரு தச்சுத் தொழிலாளியாக இருந்தமையால் சிறுவயதில் இருந்தே மரச்செதுக்கல் வேலைப்பாடுகளில் கமலரூபனுக்கு அதிக ஆர்வம் காணப்பட்டது. ஆதலால், பல்கலைக்கழகத்தில் பல பாடத்தேர்வுகள் கமலரூபனுக்கு இருந்தபோதிலும், சிற்ப வேலைப்பாடுகளுடன் நெருங்கித் தொடர்புபட்டு தன் பயணத்தை அவர் தொடர்ந்து வருகின்றார்.

கமலரூபனின் கலைப்படைப்புக்கள் ஆழமான கருத்துக்களை நேர்த்தியாக இலகுவாக வெளிப்படுத்தக்கூடியனவாகக் காணப்படுகின்றன. அதேநேரம் கலைத்துறையில் பாரம்பரியமாகப் பின்பற்றுகின்ற செயற்பாடுகளுடன் மட்டும் நின்றுவிடாது, புதிய தொழில்நுட்பங்களையும் தனது படைப்புகளில் உட்புகுத்தி அதிலும் வெற்றி கண்டுள்ளார். கமலரூபனால் வரையப்பட்ட சில ஓவியங்கள், செதுக்கப்பட்ட சிலைகள் தத்துரூபமானவையாக அமைந்துள்ளன. இவ்வாறு பல திறமைகளைக் கொண்ட கமலரூபன் வடமாகாணத்தில் உள்ள கலைப்படைப்பாளர்களுக்கு ஒரு குறியீடாகவும் கலைத்துறை மீதான ஆர்வத்தை இளைஞர்கள் மத்தியில் கொண்டுசேர்க்கும் ஓர் ஊடகமாகவும் தற்காலத்தில் திகழ்கின்றார்.

தற்போது சிறிய அளவிலான தொழில் முயற்சி ஒன்றை கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்பித்திருக்கும் கமலரூபன், வாடிக்கையாளர்களுக்கு ஏற்ப தனது கலைப்படைப்புகளை உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் சந்தைப்படுத்திவருகிறார்.

கலைத்துறை சார்ந்த படைப்புக்களுக்கான சந்தைவாய்ப்புகள், எமது நாட்டில் குறைவாகக் காணப்படுகின்றன. பலரது கலைப்படைப்புக்கள் தற்போது வீதிகளிலே காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இந்த நிலை மாற்றம்பெறவேண்டும். கலைத்துறையில் வளர்ந்து வரும் இளைஞர்களுக்கான நவீன சந்தைப்படுத்தல் வசதிகளை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இது வெறுமனே அரசாங்கத்துக்கான பணி மட்டுமல்ல. புலம்பெயர் அமைப்புகள் மற்றும் புலம்பெயர் உறவுகள் தரப்பும் இந்த விடயம் தொடர்பில் பரிசீலனையில் ஈடுபடவேண்டும். கமலரூபன் போன்ற பல இளைஞர்கள் கலைத்துறையில் சாதிப்பதற்கான பயணங்களில் தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் பயணிக்க வேண்டுமாயின், அதற்கு காலத்தேவையான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தேசியத்தின் அடையாளமாக ஆடல்வடிவம்

■ கலைஞர் வேல் ஆனந்தன்
*ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர் (அழகியற்கல்வி)*

வரலாற்றுத்தேவை நோக்கி நமது நாட்டிலுள்ள இனக்குழுமங்களின் தனித்துவமான மரபுவழி அடையாளங்கள், பண்பாட்டுப் பெறுமானங்கள் அவற்றுக்கூடாகத் துல்லியப்படும் நாளாந்தச் செயற்பாடுகளின் 'சுயங்கள்' என்பவற்றைக் குழந்தைப் பருவத்திலிருந்தே அவர்கள் தமது மயப்படுத்திக்கொள்ளக்கூடியதாக, ஆற்றுகைக்கலைகளான ஆடற்கல்வி, இசைக்கல்வி என்பன செயற்படுத்தப்பட வேண்டும். அத்தகைய முன்னெடுப்பின் எல்லையிலேயே நல்லியைவு மனப்பாங்கான ஆரோக்கியமான ஆளுமையுடன்கூடிய எதிர்கால சமூகத்தை உருவாக்கமுடியும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அழகியற்கல்வி அலகுகள் 1970 களில் கலைத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டன.

இலங்கைத்தமிழர்கள், தனித்துவமான பாரம்பரியத்துக்குரிய இனக்குழுமம் என்று வரலாற்றின் வைகறையிலிருந்தே அறியப்பட்டவர்கள். அத்துடன் கீழைத்தேசத்தவர்கள் என்ற எல்லைக்குள் நாமும் அடங்குகின்றோம். ஆடலியல் பொதுவானது. ஆனால் ஆடல்வகைகள் தான் உரிய இனக்குழுமங்களை அடையாளப்படுத்தும். இன்று நம்மிடையே பயில்நிலையிலுள்ள ஆடல்வடிவம் இந்தியத் தமிழ்நாட்டின் ஆடல்வடிவத்தை மையப்படுத்தியதாகவே காலங்காலமாக இருந்து வருகிறது. "நாம் தமிழர் அதனால் தமிழ்நாட்டின் ஆடல்வடிவத்தைப் பின்பற்றுகிறோம்" என்ற தொடர்புக்கு அப்பால், நம்முடைய மற்றெல்லா வாழ்வம்சங்களிலும் நமக்கான தனித்துவ அடையாளங்கள், வேறுபாடுகள் உண்டு. அவற்றை எளிதாக வேறுபடுத்தி அறியலாம்.



> தமிழ்ப் பாடசாலைகளின் பாடவிதானத்திலும் பல்கலைக்கழக தமிழ் மூலப் பட்டப்படிப்பிலும் கர்நாடக சங்கீதம் பரதநாட்டிய கற்கைநெறிகள் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது இலங்கையில் தேசியம் என்பது பெரும்பான்மை இனத்தவரின் குறியீடு என்பதை இதனூடு அழுத்தி உரைக்கப்பட்பட்டுள்ளது.

தற்போது பயில்நிலையிலுள்ள ஆடல்வடிவத்திலாவது அந்த சாஸ்திரியங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆற்றுகைப்படுத்தல் முறை ஈழத்துப்பாங்கு ஒன்றின் முகிழ்நிலை பற்றிச் சிந்தித்தால் என்ன? சாஸ்திரியத்திற்கு ஆடல்வடிவமா? அல்லது ஆடல்வடிவத்திற்கு சாஸ்திரியமா...? இதில் எது எதற்கு இன்றியமையாதது? என்ற தெளிவு முதலில் நமக்கு ஏற்பட வேண்டும். இத்தனை தசாப்தகாலமாக இறக்குமதியாகும் ஆடல்வடிவத்திற்கு நமது மண்ணில் சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தியது போன்ற செயற்பாடுகளுக்கு அப்பால் இவற்றுக்கான முக்கிய முகவர்கள் நாங்களே என்று முன்னுரிமை காட்ட முனையும் தர்க்க நிலையே நம்மவர்கள் மத்தியில் வியாபித்துள்ளது. இந்தச் சூழ்நிலையில் எமது இனக்குழுமத்தின் அடையாளங்களை இனங்காட்டக்கூடிய எத்தகைய பணியை முன்னெடுத்துள்ளோம்? என்ற வினாவுக்கு எங்கே? யாரிடம் விடை தேடுவது...?

இத்தகைய நெடும்போக்குக் காரணம் நமது இயலாமையா? இனத்துவ அடையாளம் சார்ந்த அக்கறையின்மையா? அல்லது வார்த்தைகளால் செயல்களால் வெளிப்படுத்தமுடியாத ஒருவித மோக மயக்கநிலை அடிமைத்தனமா? அன்றுமுதல் இன்றுவரையும் தமிழகத்து நாவல்களையும் சிறுகதைகளையும் வாசித்து அந்த மண்ணின் சுயத்தை அறிந்த நாம் அவற்றைப் புறமொதுக்காது ஈழத்து இலக்கியப்பரப்பில் மிதக்கும் நாவல்கள் சிறுகதைகளை வாசித்து நமது மண்வாசனையையும், அதுசார்ந்த சம்பவங்களையும் அதனகத்துள்ள சுயங்களையும் தெரிந்து தெளிந்து நமது மயப்படுத்திக் கொள்ளவில்லையா? செவ்வியல்முறை ஊடகமாக தமிழுலகெங்கும் ஈழத்துத்தமிழ் இலக்கியம் பவனி வருகிறதே... இது புறந்தள்ளுப்பட்டுவிட்டதா?

ஆக, அந்நியனொருவனது மாடிவீட்டுக் குளிரூட்டி அறையில் வாடகைக்கிருந்து கொண்டு வரட்டுத்தனமான தற்பெருமை காட்டுகின்ற ஒருவனைவிட, ஒரு பரப்பு சொந்தக்காணியில் மண்குடிசை அமைத்து வாழ்வது அவனுக்கென்றொரு முகவரியைத் துல்லியப்படுத்தும் அல்லவா? "இவற்றை நோக்கிய முன்னெடுப்புகளுக்கு சாஸ்திரீயம் என்ற காரணம்தான் குறுக்கே நிற்குமானால் அந்த சாஸ்திரீயம் உடைத்தெறியப்பட வேண்டியதே."


**சாஸ்திரீயம் என்றால் என்ன?**

குறிப்பிட்ட நாட்டினதும் அந்நாட்டின் பிரதேசங்களினதும் பண்பாட்டுப் பெறுமானங்கள் வாழ்விட அடையாளங்கள் உரிய சமயப் பண்புகள் என்பவற்றின் அடக்கங்களை ஆடற்கோலங்கள் மூலம் ஆற்றுகைப்படுத்துவதற்காக வரையறை செய்யப்பட்ட ஒரு ஒழுங்குமுறையே சாஸ்திரீயம் என்பதாகும். ஆடல்வடிவங்கள் பலவாக உள்ளதுடன் அவை தனித்துவமான மகுடங்களையும் கொண்டுள்ளன. இவற்றையெல்லாம் சாஸ்திரீய ஆடல்வகைகளென்றே அழைக்கின்றார்கள். ஆனால் குறிப்பிட்ட ஒரு சாஸ்திரீய ஆடல்வகையின் வரையறை இன்னோர் சாஸ்திரீய ஆடல்வகைக்குப் பொருந்தாது.

ஆகவே ஆடல்வகைக்கு ஆடல்வகை அந்த சாஸ்திரீயமும் வேறுபடுகிறது. ஓர் ஆடல்வகையில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆற்றுகைப்பாங்குகள் உள்ளன. சாஸ்திரீயம் என்பது ஒன்றா? இரண்டா? அல்லது பலதா...? ஆக, சாஸ்திரீயம் என்பது ஆடல்வடிவங்களை ஆக்கும் ஆசான்களுக்குக் கட்டுப்பட்டதே தவிர சாஸ்திரீயம் என்பதற்கு ஆசான்கள் கட்டுப்பட்டவர்கள் அல்ல. இந்த யதார்த்தத்தின் பிரதிபலிப்புத்தான் கால் நூற்றாண்டுக்கும் மேலாக சென்னையை மையப்படுத்திய ஆடல்வடிவத்தில் பல்வகை இடைச்செருகல்களுடன்கூடிய சமர்ப்பித்தல் பாங்குகள் புதிய பாணிகள் என்ற போர்வையில் தாராளமாய் அரங்கிற்கு வருகின்றன. நாம் ஈழத்தமிழர் என்று சிந்திக்கின்றபோது, நமது நாட்டில் தென்னிலங்கையர் மத்தியிலாவது நமது அடையாளங்களை ஆடற்கோலங்கள் ஊடாக வெளிப்படுத்தக்கூடிய ஆற்றுகைப்பாங்கு ஒன்றாவது நம்மிடையே உண்டா...? அதற்காக புதிய ஆடல்வடிவம் ஒன்றினையா ஏற்படுத்த வேண்டும்? அது சாத்தியமா...? அப்படியானால் நம்மிடையே பயில்நிலையிலுள்ள ஆடல்வடிவத்தை நிராகரிக்க வேண்டுமா..? அப்படி நிராகரிக்க வேண்டும் என்பதல்ல அதற்குரிய தீர்வு. இங்கு நடைமுறையிலுள்ள ஆடல்வகையிலேயே வழுவூரார்பாணி, கலாசேத்திராபாணி, மங்களூர்பாணி, பத்மாசுப்பிரமணியம்பாணி என்ற சமர்ப்பித்தல் பாங்குகள் பல இருந்துள்ளன. இந்தப் பாங்குகள் அல்லது பாணிகள் ஆக்கியவர்களுடைய பிரதேசத்தை அல்லது உரிய பரம்பரையைக் குறித்து நிற்பதைப் பார்க்கின்றோம். ஈழத்துப்பாங்கு ஒன்று உருவாக வேண்டும் என்று சிந்திப்பதில், அதைச் செயற்படுத்துவதற்கான ஆரம்ப முயற்சியில்கூட ஈடுபடாமல் அதியுயர்பட்டதாரிகளும்,நிறுவனங்களும் உறங்குகின்றனவே ஏன்?

நாட்டில் தொடரும் அரசியல் அழுத்தங்களும் நிலப்பறிப்பு நடவடிக்கைகளும் இனக்கலப்பு முயற்சிகளும் மதத்தின் பெயரிலான ஆக்கிரமிப்பும் எம்மை எமது சுயங்களிலிருந்து அந்நியப்படுத்திக் கொண்டு வருகின்றன. தமிழ்ப்பாடசாலைகளின் அழகியல்கல்வி பாடவிதானத்துள் தென்னிலங்கையின் ஆடல்வடிவங்களுக்குரிய அறிமுறை அலகுகள் திணிக்கப்பட்டுவருகின்றன. விரைவில் அவற்றுக்குரிய செயல்முறை அலகுகளும் நுழையும் என்பதுடன் உரிய கால எல்லையில் நமது வடக்கு கிழக்குப்பல்கலைக்கழக ஆடற்கலை சார்ந்த பட்டப்படிப்பும், தென்னிலங்கையின் ஆடல்வகைகளாக அமையும் என்பதும் எதிர்பார்க்கப்பட வேண்டியதே.

அந்த இலக்குடன்கூடிய முன்னேற்பாடாகவே சிங்கள மக்கள் மத்தியில் உள்ள ஆடல்வகைகள் ஒன்றிணைக்கப்பட்டு "தேசிய நடனம்" என்ற ஒற்றை மகுடத்தின் கீழ் சிங்களமொழிமூலப் பாடவிதானத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதுடன் இதுசார்ந்த பல்கலைக்கழகப் பட்டப்படிப்பும் "சிங்களம்" என்ற மகுடத்தில் நடனக்கலை கற்கைநெறியும் "கீழைத்தேச சங்கீதம்" என்ற மகுடத்தில் சங்கீத கற்கைநெறியும் உள்வாங்கப்பட்டுள்ளன. இதில் கீழைத்தேசம் என்பதன் எல்லை எது? என்பதும் அந்த எல்லைக்குள் வேறு இசைவடிவங்களும் உள்ளனவா? என்பதும் சற்று மயக்கமாயுள்ளது.



ஆனால் தமிழ்ப்பாடசாலைகளின் பாடவிதானத்திலும் பல்கலைக்கழக தமிழ்மூலப் பட்டப்படிப்பிலும் கர்நாடக சங்கீதம் பரதநாட்டியக் கற்கைநெறிகள் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது இலங்கையில் தேசியம் என்பது பெரும்பான்மை இனத்தவரின் குறியீடு என்பதை இதனூடு அழுத்தி உரைக்கப்பட்பட்டுள்ளது. அதுமாத்திரமின்றி ஈழத்தமிழர் பயில்நிலையில் கொண்டிருக்கும் ஆடல்வடிவமும், இசைவடிவமும், ஈழத்தமிழரது மரபுரித்துக்குரியதல்ல.

அதனால் அது "இலங்கையின் தேசியத்து எல்லைக்குள்; அடங்கவில்லை என்பதும் துல்லியப்படுத்தப்பட்டுள்ளது. இதை உறுதிப்படுத்துவது போலவே கடந்த வருடம் நவம்பர் மாதம் மகரகமையிலுள்ள இலங்கை தேசிய கல்வி நிறுவனத்தில் இடம்பெற்ற தமிழ் நடனவிழாவில் அந்நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் சிறப்புரையும் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

*(மறுபக்கம் பார்க்க)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தமிழ்த்தேசியத்தின்...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தென்னிலங்கையின் நடனங்கள் பற்றி அறியக்கூடாதா? அவற்றையும் பயில்நிலையில் ஏற்கக்கூடாதா? என்ற வினா எழலாம். ஏற்கலாம் என்பதே உண்மைநிலை. ஆனால் தென்னிலங்கையரை அடையாளப்படுத்தும் ஆடல்வடிவங்கள் போன்று ஈழத்தமிழருக்கென்றொரு ஆடல்வகை அல்லது ஆற்றுகைப்பாங்காவது எம்மை அடையாளப்படுத்தக்கூடியதாக இருந்தால், அந்த அத்திவாரத்தின் தளத்திலிருந்து நமது சுயம் மாற்றப்பட முடியாத விதமாக, தென்னிலங்கை நடனங்களை பயில் நிலையிலும் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் நம்மிடம் தான் அப்படி ஒன்றுமில்லையே. என்னதான் தென்னிந்தியாவுடன் நமக்கான மொழித்தொடர்பும் இனத்துவத்தொடர்பும் இருந்தாலும் நாடுகள் என்ற வகைப்படுத்தலால் நாம் இலங்கை நாட்டவர்களே. இலங்கையின் ஆடல்வகைகளைத்தான் பல்கலைக்கழக மட்டத்தில் போதிக்கவேண்டும் என எடுக்கப்படும் முன்னெடுப்புக்கு இலங்கைத்தமிழினத்தை அடையாளப்படுத்தும் ஆடல் ஆற்றுகைவடிவமாக எதை நாம் முன்னிலைப்படுத்தப் போகிறோம்.

இசைத்தமிழ் மேலெழுந்திருந்தால் நம்மை அடையாளப்படுத்தும் "ஆடல் தமிழுக்கு" ஆதாரம் கிடைத்திருக்கும், அழகியற்கல்வி அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் (1970..) நானும் என்னுடன் இணைந்து நின்றவர்களும் சமர்ப்பித்த முன்மொழிவுகள் ஏற்கப்பட்டிருந்தால்.... அன்று அதை எதிர்த்துநின்று கொக்கரித்த அந்தப் பரம்பொருள்களும் அவருடனிணைந்து சாஸ்திரோக்தம் சம்பிரதாயம் என்று பேசியவர்களும் எப்படியாவது செய்து முடித்தால் போதும் என்ற மனநிலையோடு மட்டும் செயற்பட்ட அந்நாளைய யாழ்ப்பாணத்துக் கல்வித்துறை மேலாளரும் கொஞ்சமாவது "இனத்துவ அடிப்படையில்" எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்திருந்தால், அரச அங்கீகாரத்துக்குட்பட்டதாக "இசைத்தமிழும், ஆடல் தமிழும் உள்வாங்கப்பட்டு அதன் நிழல்வழி நின்று நம்மை அடையாளப்படுத்தும் ஆற்றுகைமுறை ஈழத்துப்பாங்கு (ஈழத்துப்பாணி) படிமுறையாக முன்னோக்கி வளர்வதற்கு வழிபிறந்திருக்கும். செழித்துச்சிலிர்த்து வியாபித்து, அரைநூற்றாண்டையும் கடந்திருக்கும், தேசியம் பற்றிய தேடலுக்கும் தேவையிருந்திருக்காது.... ஆனால் இன்று இந்த வெறுமைக்கு நாமேதான் காரணமாகிவிட்டோம்.


எதிர்வரும் காலங்களில் இது சார்பாக ஏற்படும் விபரீதமான விளைவுகளைத்தான், அதன் பெறுபேறுகளாக நமது அடுத்தடுத்த பரம்பரைக்கு ஒப்படைத்துச் செல்லப் போகிறோமா? அல்லது இதுசார்ந்த அனைவரும் தாபனங்களும் ஒருமுகப்பட்டு இதற்கான உரியமுறை செல்நெறியைத் தேடப்போகிறோமா? அல்லது தொடர்ந்தும் உறக்கத்திலிருக்கப் போகிறோமா? என்பதுதான் இனத்துவ வழிநின்று சிந்திப்போரது ஆதங்கமாகும். இன்னும் சொல்வதானால் இந்த வரலாற்றுத் தேவையுடன்கூடிய தமிழ்த்தேசியத்தின் தேவை ஏற்கப்படுவதும் மறுக்கப்படுவதும் இதுசார்ந்த ஆடலியலாளர்களதும் தாபனங்களினதும் கைகளிலேயே தங்கியுள்ளது. இதுவே எனது இதுசார்ந்த வாக்குமூலம் அதுமட்டுமன்றி, ஈழத்துக்கு அப்பாலும் பன்னாட்டு அரங்குகளில் பலமுறை ஆற்றுகை செய்ததன் பெறுபேறாக நான் பெற்ற "ஆதாரபூர்வமான அனுபவத்தின் சாட்சியம்"

நிறைவாக .....

மூன்று தசாப்தகாலத்துக்கும் மேலான காலம் அழகியல் கல்வித்துறையில் அரச பணியாற்றியவன் . அதற்கு சமாந்தரகாலத்துடன் இணைந்த அரைநூற்றாண்டுக்கும் மேற்பட்ட காலமாக இன்றுவரை ஆடற்கலை வழித்தடத்தில் ஆற்றுகையாளனாகவும், ஆற்றுகைகளை அரங்கேற்றுபவனாகவும் சுவடுபதித்துவருபவன். எனினும் நான் மேலே குறிப்பிட்ட இந்த எல்லைகளுக்கு அப்பால் என்னை விலத்தி நிறுத்திவிட்டு "ஈழத்தமிழர் மத்தியில் உள்ள ஒரு சாதாரண மூத்த குடிமகனின் இனத்துவ அடையாளம் சார்ந்த வேண்டுகோளாகவாவது இது ஏற்கப்பட்டு செயல் வடிவம் பெறுமா...? காலம்தான் பதில் தரவேண்டும்.

■

# மன்னிப்பு என்பது
## மனித முதிர்ச்சியின் வெளிப்பாடு



இறைவார்த்தை ஆற்றல்மிக்கது. அதன் நோக்கமே எம்மை இறைவனுக்கும் அடுத்திருப்போருக்கும் நல்ல மனிதர்களாக்குவது. மழையும் பனியும் நிலத்தினுள் மறைந்துகிடக்கும் மூலப்பொருள்களுக்கு ஊட்டமளித்து நிலத்தை வளப்படுத்தி பலன் தருகின்றன. அவ்வாறே இறைவார்த்தையையும் முறையாகக் கேட்டு தியானிக்கும்போது உள்ளத்தில் உறைந்துகிடக்கும் நற்பண்புகளைத் தட்டியெழுப்பி மனிதர்களை இறைவனுக்கு உகந்தவர்களாக்குகிறது.

எமது வேண்டுதல்கள் வெறும் வார்த்தைகளின் தொகுப்பாக இருக்கக்கூடாது. இவை வாழ்வின் வெளிப்பாடாக இருக்கவேண்டும். சுயதேவைகளை மையப்படுத்தாது சமூகத்தின் கண்ணாடியாகப் பிரதிபலிக்கவேண்டும். விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே உமது பெயர் தூயது எனப் போற்றப்பெறுக என இயேசு கற்பித்த செபம் பொதுமைப்பாட்டை வெளிப்படுத்துகிறது. மன்னிப்பை வலியுறுத்துகிறது.

தவறு செய்வது மனிதம், மன்னிப்பது தெய்வீகம் என்கிறது ஓர் ஆங்கிலப் பழமொழி. மனிதன் மற்றவர்களை ஏற்கவேண்டும். மதிக்கவேண்டும். மன்னிக்கவேண்டும். மனிதன் பரிதாபத்திற்குரியவன். இன்னும் அவன் வளரவில்லை. அவனது சுயநலம் சாகவில்லை. மன்னிப்பது மனிதனின் முதிர்ச்சி நிலையின் வெளிப்பாடு என்பதை உணர்ந்து மன்னித்து இறைமன்னிப்பைப் பெறுபவர்களாகத் திகழ்வோம்.

**எஸ்.யேசுதாஸ்,** கொழும்புத்துறை

# சி.விசுவாசம்
## கல்வியை விசுவாசித்த உன்னத ஜீவன்

■ **நந்தன்**

யாழ்ப்பாணத்திருநாட்டில் நீர், நிலவளத்துடன் சிறந்துவிளங்கும் பொலிகண்டி எனும் கிராமத்தில் கல்வியிலும் அறிவிலும் நற்பண்புகளிலும் சிறந்துவிளங்கிய சின்னத்தம்பி, ஈஸ்வரியம்மா தம்பதியரது தவப்புதல்வராக 1962 ஆம் ஆண்டு தை மாதம் 30 ஆம் திகதி விசுவாசம் பிறந்தார். இவர் சிறந்த ஓர் ஆசிரியர். கல்வித்துறையில் முழுமையாகத்தன்னை அர்ப்பணித்துக்கொண்டவர். ஆசிரியர்சேவைக்கு கலங்கரை விளக்காகவும் முன்னோடியாகவும் விளங்கினார்.



ஒரு புனிதமான ஆசிரியர்சேவையில் ஈடுபட்டவராவார். கற்பித்தல் தொழிற்பாட்டில் பல புதிய நவீன ரீதியான கற்பித்தல் நுட்பங்களைக் கையாண்டு கற்பித்தல் கலையில் பல புரட்சிகரமான முன்னேற்றங்களை ஏற்படுத்தினார். குறிப்பாக தான் உப அதிபராகப் பணியாற்றிய பூநகரி மகா வித்தியாலயம் மற்றும் அதிபராக சேவையாற்றிய பூநகரி மட்டுவில் நாடு அ.த.க பாடசாலை போன்றவற்றின் கிராமப்புற மாணவர்களை நாடிச்சென்று இலகுவில் கற்கத் தூண்டும் உத்திகள் பலவற்றைக் கையாண்டு அவர்களின் பாடசாலை வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். இவரது கல்விச்சேவையினால் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப்பெற்று சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர். அமரர் விசுவாசம் ஆசிரியர், கல்விச்சேவைக்கு அப்பால் சிறந்த ஒரு நாடக எழுத்தாளர், கவிஞர்,பண்டிதர், மேடைப்பேச்சாளர், நூற்றுக்குமேற்பட்ட ஆய்வுரைகளை மேற்கொண்டவர். அகில இலங்கை ரீதியில் கவிதைப்போட்டியில் முதலாம் பரிசைப் பெற்று சாதனைபடைத்த கல்விமான்.

இப்படிப்பட்ட சிறந்த ஓர் ஆசிரியரைக் கல்விச்சமூகம் இழந்து நிற்கிறது. கல்வித்துறையிலும் சமூக அமைப்பிலும் கூட மக்களுக்கும் மாணவ சமுதாயத்திற்கும் அரும்பணியாற்றி மக்கள் மத்தியில் பெரும் நன்மதிப்புகளைப் பெற்றுக்கொண்டார். இவ்வாறான ஒரு பெருந்தகை மாணவர், பொதுமக்கள் மத்தியில் அன்பு, பண்பு, விசுவாசம் கொண்ட சமூகப்பற்றாளர், தனது கல்விப்பணியை முடித்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த சமயத்தில் போதை நிரம்பிய காடையர் கூட்டத்தின் தாக்குதலுக்கு இலக்காகி கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி மரணமடைந்தார். கல்விப்போதனை மூலம் அறிவும், ஆற்றலும் நற்பண்பும் நிறைந்த நல்ல பிரஜைகளை உருவாக்கினார். தனது இறுதிமூச்சுவரை சமூகநலனுக்காகவும், கல்வி நலனுக்காகவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட இவரின் கல்விப்பணியை ஏனையவர்களும் முன்மாதிரியாகப் பின்பற்றிச் செல்வதே இவருக்குச் செய்யும் நன்றிக்கடனும் அவரின் ஆத்ம சாந்திக்கான நேர்த்தியுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவியைத் தருக!

பிரான்ஸ் மீது அமெரிக்கா கூடுதல் வரிகளை விதித்தால், பிரான்ஸால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட சுதந்திர தேவி சிலையை மீளத் தருமாறு பிரான்ஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ரபேல் வலியுறுத்தியுள்ளார். (ம)

# நீலப் பறவை ஏலத்தில்!

ருவிற்றர் நிறுவனத்தின் ஆரம்பகாலச் சின்னமாக இருந்த நீலநிறப் பறவையை ஏலத்தில் விடவுள்ளதாக, எலான் மஸ்க் அறிவித்துள்ளார். (ம)

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் கீழ் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் அமைக்கப்பட்ட கடைகளை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க மீள்கேள்வி மனு கோரலுக்கான அறிவித்தல் - 2025

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 19.03.2025 தொடக்கம் 01.04.2025 பிற்பகல் 2.00 மணிவரை (அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 02.04.2025 ஆம் திகதி மு.ப.10.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 02.04.2025 ஆம் திகதி மு.ப.10.00 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- நகராட்சி மன்ற அலுவலகம் சாவகச்சேரி.

கேள்விஅட்டவணை

பஸ் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள கடைத்தொகுதி

| கடை இலக்கம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | மாத வாடகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்கமுடியாதது) |
|---|---|---|---|---|
| LDSP/PT2/02 | ரூபா 10,800,000.00 | ரூபா 45,000.00 | ரூபா. 162,000.00 | ரூபா. 2,000.00 |

பஸ் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள கடைத்தொகுதி (மேல்மாடி)

| கடை இலக்கம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | மாத வாடகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்கமுடியாதது) |
|---|---|---|---|---|
| LDSP/BT4/01 | ரூபா 2,400,000.00 | ரூபா 10,000.00 | ரூபா 36,000.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/BT4/02 | ரூபா 1,920,000.00 | ரூபா 8,000.00 | ரூபா. 28,800.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/BT4/03 | ரூபா 2,160,000.00 | ரூபா 9,000.00 | ரூபா 32,400.00 | ரூபா. 2,000.00 |

சந்தையின் உட்பகுதியில் அமைந்துள்ள கடைத்தொகுதி

| கடை இலக்கம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | மாத வாடகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்கமுடியாதது) |
|---|---|---|---|---|
| LDSP/PT3/06 | ரூபா 12,530,000.00 | ரூபா 9,000.00 | ரூபா 32,400.00 | ரூபா. 2,000.00 |

நிபந்தனைகள்:-

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. கேள்விப்படிவம் பெற விரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும், கிராம சேவகரினால் வழங்கப்பட்ட வதிவிடத்தினை உறுதிப்படுத்தும் வதிவிட குணநல சான்றிதழ் மற்றும் குடும்ப அட்டையின் பிரதி என்பவற்றுடனும் சமூகமளிக்க வேண்டும்.
3. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியினை "செயலாளர், நகரசபை, சாவகச்சேரி" எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடுதல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் .யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு 1ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
4. ஒருவர் ஒரு கடைக்கு ஒரு விண்ணப்ப படிவம் மாத்திரம் சமர்ப்பிக்க முடியும் என்பதுடன், சித்திபெறும் ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு கடை மாத்திரமே வழங்கப்படும். அத்துடன் ஏற்கனவே நகரசபையின் கடைகளை நீண்ட கால குத்தகைக்கு பெற்றவர்கள் விண்ணப்பிக்க முடியாது.
5. கடைகளுக்குரிய மாதாந்த வாடகையாக விலைமதிப்பீட்டு திணைக்களத்தினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்த வேண்டும்.
6. குறித்த கடையினை ஒப்பந்ததாரர் எந்தவகையிலும் உப வாடகைக்கு கொடுக்கவோ உரிமை மாற்றம் செய்யவோ முடியாது.
7. குறித்த கடைகளில் சகிக்க முடியாத தொழில்கள் மற்றும் அபாயகரமான தொழில்கள் ஆகிய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது..
8. சித்திகர கேள்விதாரராக தெரிவு செய்யப்படுபவர் கேள்வித்தொகையை முழுமையாக செலுத்தி பற்றுச் சீட்டினைப் பெற்றுக்கொண்டு நகராட்சி மன்றத்துடன் ஒப்பந்தத்தினை செய்து கொள்ள வேண்டும்.
9. சித்திகர கேள்விதாரர் நகர சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
10. சித்திகர கேள்விதாரர் 03 மாத கால வாடகையினை பாதுகாப்பு வைப்பு பணமாக செலுத்த வேண்டும்.
11. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார வரி, வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்துவதுடன் வியாபார உரிமத்திற்குரிய கடைகள் வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
12. நிர்ணயிக்கப்பட்ட கேள்வித்தொகையை விட குறைவாக கோரப்படும் கேள்வி மனுக்கள் நிராகரிக்கப்படும். அத்துடன் அவற்றுக்கான கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
13. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் மற்றும் கேள்வி தொடர்பான எந்தவொரு இறுதி முடிவினையும் எடுக்கும் அதிகாரம் சபையின் செயலாளருக்கு உண்டு.
14. மேலதிக விபரங்களை நகராட்சி மன்ற அலுவலகத்தில் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்,
நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.

19.03.2025

(CR/4606) J-1

## சிவமோகனின்...

சதீஸ்கரன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்காளி தரப்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி கு.குருபரனும், வழக்கின் முதல் மூன்று எதிராளிகளான கட்சியின் பதில் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், கட்சியின் பதில் பொதுச்செயலாளராக இருந்த மருத்துவர் ப.சத்தியலிங்கம், கட்சியின் நிர்வாகச் செயலாளர் எக்ஸ்.குலநாயகம் ஆகியோர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி கே.சயந்தன் ஆகியோரும் முன்னிலையாகி இருந்தனர்.

இதன்போது, "தற்போது உள்ளூராட்சித் தேர்தல் அழைக்கப்பட்டுள்ளதால் அதில் போட்டியிடக்கூடிய புதிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆதலால், கட்சியின் உறுப்புரிமை நீக்கம் தொடர்பில் தீர்மானிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது" என்று சிவமோகனின் தரப்பில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி கு.குருபரன் சுட்டிக்காட்டினார். அத்துடன், அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பியசேன கட்சியிலிருந்து நீக்கப்பட்ட உயர்நீதி மன்ற வழக்கையும் சட்டத்தரணி குருபரன் சுட்டிக்காட்டினார். அத்துடன், மத்திய குழுவுக்கு மத்திய குழுவின் உறுப்பினராகவும், கட்சியின் துணைத்தலை வர்களில் ஒருவராகவும் இருப்பவர் என தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தில் இன்றும் பெயரிடப்பட்டுள்ள எஸ்.சிவமோகனுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு எந்தத் தத்துவமும் மத்திய குழுவுக்கு இல்லையென்றும் சட்டத்தரணி குருபரன் சுட்டிக்காட்டினார்.

எதிராளித் தரப்புச் சட்டத்தரணியான சுமந்திரன் அந்தக் கருத்துக்களை ஆட்சேபித்தார். 'ஏற்கனவே பிராது தாக்கல் செய்யப்பட்டு கட்டாணைக்கு ஆதரிக்கப்பட்டபோது கட்டாணையை நீதிமன்றம் வழங்கவில்லை. எனவே, வேறொரு கட்டாணையைக் கோரி வழக்கை நகர்த்தமுடியாது. அத்துடன், கட்சிக்கு விசுவாசம் இல்லாமல் செயற்படும் எவருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கவும், வெளியேற்றவும் மத்திய குழுவுக்கு அதிகாரம் உண்டு என்று சுமந்திரன் தனது ஆட்சேபனையில் சுட்டிக்காட்டினார். அத்துடன், கட்சியில் மாவட்டக் கிளைத் தலைவராக இருந்துகொண்டு பொதுத்தேர்தலில் மாவட்டத்தில் போட்டியிடும் கட்சியின் வேட்பாளர்களைப் பகிரங்க வெளியில் வேண்டுமென்றே மோசமாக விமர்சித்து குற்றம் இழைத்த வழக்காளிக்கு இன்னொரு தேர்தலில் வாய்ப்பு அளிக்க கட்சி இடமளிக்கமாட்டாது. இப்போது வந்திருக்கின்ற தேர்தலும்கூட, கட்சியில் இடமளிக்காமல் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து மனுதாரரை இடைநிறுத்த வேண்டிய தேவையை மீண்டும் ஏற்படுத்தி இருக்கின்றது. ஆகவே, அது புதிய விடயம் அல்ல. அதைப் புதிய விடயமாகக் காட்டி, அவரைக் கட்சியிலிருந்து இடைநிறுத்தியமைக்கு எதிராக இடைக்காலத் தடை விதிப்பதற்குப் புதிய தேவைப்பாடு எழுந்திருப்பதாகக் காட்டுவது அர்த்தமற்றது என்றும் சட்டத்தரணி சுமந்திரன் தனது தரப்புக் கருத்துக்களை முன்வைத்தார்.

அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கட்சியின் முடிவுக்கு மாறாகவே தற்போது சிவமோகனை ஆதரித்துள்ளதாகவும், சட்டத்தரணி சுமந்திரன் சுட்டிக்காட்டினார். சுமந்திரனின் கருத்தை சிறீதரனின் சட்டத்தரணி கோவர்த்தனன் கடுமையாக மறுத்தார். அத்துடன் கட்சியின் நிலைப்பாட்டுக்கு மாறான முடிவை தனது கட்சிக்காரர் (சிறீதரன்) எடுக்கவில்லை. மாறாக கட்சியின் யாப்பைப் பாதுகாப்பதே அவருடைய முழுமையான நோக்கம் என்றும் சிறீதரனின் சட்டத்தரணி மன்றுரைத்தார்.

வாதவிவாதங்களைக் கேட்டறிந்த நீதிமன்றம் மருத்துவர் சிவமோகனின் உறுப்புரிமை தொடர்பான தனது முடிவை நாளை அறிவிக்கவுள்ளது. (அ-ம-26)

# பனைமரக் கடத்தல்; இளைஞன் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ். சண்டிலிப்பாய் பிரதேசத்தில் பனைமரங்களுடன் கைதான இளைஞன் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார் என மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் பனைமரக்குற்றிகளை ஏற்றிச்சென்ற சந்தேக நபரான இளைஞன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

உழவு இயந்திரம் மற்றும் பனைமரக்குற்றிகளுடன் சந்தேகநபரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது கடுமையாக எச்சரிக்கையுடன் பிணையில் விடுவிக்கப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச- 25, 125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
05 ✦ 01 ✦ 1942



மறைவு
17 ✦ 03 ✦ 2025

## செல்வி தவமணி கந்தையா

(காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி முன்னாள் பாலர் பாடசாலை ஆசிரியர்)

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும் ஆயிலியை வசிப்பிடமாகவும் கொண்ட **செல்வி தவமணி கந்தையா** (காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி முன்னாள் பாலர் பாடசாலை ஆசிரியர்) அவர்கள் திங்கட்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா விசாலாட்சியின் அன்புமகளும், காலஞ்சென்ற சரோஜினிதேவி மற்றும் தில்லைநாதன், ஈஸ்வரி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற விக்னேஸ்வரன் மற்றும் சிவஞானம், சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துணியும், தேவாம்பிகை, வடிவாம்பிகை, நீலாம்பிகை, ஞானாம்பிகை, ஜெகதாம்பிகை, மீனாம்பிகை, சரவணபவன், ஜெயராம், தபேந்திரன், யோகேஸ்வரன், சர்வானந் ஆகியோரின் அன்புச் சின்னம்மாவும், ரஞ்சிதமலர், கிருபைமலர், செந்தில்குமார், சுரேஸ்குமார், விக்கினேஸ்வரி, கிரிதரன், காலஞ்சென்ற உதயகுமாரன், இன்பமலர், தேனுகா, சிறீசைலஜா, ராஜேஸ்வரி, சற்குணராஜா, ரவீந்திரன், றஜிதா, ஜனனி ஆகியோரின் அருமை மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 20.03.2025 வியாழக்கிழமை காலை 7 மணிக்கு கிரியைகள் நடைபெற்று, பின்னர் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்

சரவணபவன் - 0044 79 2745 7600
மீனாம்பிகை - 0094 77 951 8674
கிரிதரன் - 0094 71 807 1098

## நல்லூர் பிரதேசசபை
## உப அலுவலகம் நல்லூர்
## ஆதன வரிப் பதிவேட்டில் வரியிறுப்பாளரின் பெயரைச் சேர்த்துக்கொள்ளுதல் தொடர்பான அறிவித்தல்.

பலாலி வீதி (பனிக்கர் ஒழுங்கை). வட்டாரம் 07 இல் ஆதன இலக்கம் 68/18 மற்றும் ஆதன இலக்கம் 68/20 ஆகியவற்றுக்கிடையில் அமைந்துள்ள ஆதனமானது நல்லூர் பிரதேசசபை நல்லூர் உப அலுவலகத்தினால் பேணப்பட்டுவரும் ஆதன வரிப்பதிவேட்டில் வரியிறுப்பாளர் பதிவுகள் இன்றி காணப்படுகின்றது. குறித்த ஆதனவரிப் பதிவேட்டில் இவ்வாதனத்திற்கான தற்போதைய வரியிறுப்பாளராக தனது பெயரினை பதிவு செய்யுமாறு திரு. யோன் செல்லையா லோறன்ஸ் என்பவர் எமது சபைக்கு விண்ணப்பம் ஒன்றினைச் சமர்ப்பித்துள்ளார். குறித்த விபரங்கள் வருமாறு

1. குறித்த கோரிக்கை தொடர்பில் பிரதேச சபையினது கள ஆய்வு மற்றும் விசாரணைகளின் பிரகாரம் குறித்த ஆதனத்திற்கு உத்தேச ஆதன இலக்கமாக 68/19 ஆனது அடையாளப் படுத்தப்பட்டுள்ளது.
2. பிரசித்த நொத்தாரிசு ரி.கணாதீபன் அவர்கள் முகதாவில் 2356 ஆம் இலக்கத்தில் 2023.01.27 ஆம் திகதிய ஆட்சிப்பிரகடன உறுதியின் மூலம் நிலப்பரப்பு 05 குளிகள் நான்கு தசம் மூன்று ஐந்து அளவு கொண்ட ஆதனத்தை வெளிப்படுத்தி ஆதன பெயர்மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார். இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் K.A.இளையதம்பி அவர்களினால் 164 ஆம் இலக்கத்தில் 2004.04.24 ஆம் திகதி அளந்து வரையப்பட்ட நில அளவை படத்தின்படி கிழக்கு சண்முகத்தின் உரித்தாளர்களின் ஆதனம் வடக்கு கனகசபை பெண் பராசக்தியின் ஆதனம் மேற்கு - பொன்னையா செல்வரட்ணத்தினதும் கந்தையா மற்றும் மறுபேர்களினது ஆதனமும் பாதையும் தெற்கு - கணேசன் பெண் புவனேஸ்வரியின் ஆதனம் இதிலுள்ள வான் செய்பயிர்களும் உள்ளடங்கலாக இதடங்கலனைத்தும்
3. இவ்வாதனத்தினது உறுதி வெளிப்படுத்தல் சாதனமாக காணப்படுவதனாலும் இக் கோரிக்கை மற்றும் செயற்பாடுகள் சட்டபூர்வமானதும் வெளிப்படைத்தன்மை கொண்டதும் பொறுப்பு வாய்ந்ததாக காணப்படுவதனாலும் விண்ணப்பதாரரின் சம்மதத்துடன் அவரது செலவில் இவ் விளம்பரம் இப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகின்றது.
4. எனவே மேற்படி பெயர்மாற்ற கோரிக்கை அல்லது இவ்வாதனம் தொடர்பாக ஆட்சேபனைகள் ஏதும் தெரிவிக்க விரும்புபவர்கள். பத்திரிகை விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து முப்பது (30) நாட்களிற்குள் தமது ஆட்சேபனையை எழுத்து மூலமான முறைப்பாடாகவும் முறைப்பாட்டிற்கு ஆதாரமான சட்டரீதியான ஆவணங்களுடன் இணைத்து நேரடியாகவோ அல்லது செயலாளர், நல்லூர் பிரதேச சபை, இல 14/05 கருவப்புலம் வீதி, கொக்குவில் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாவோ சமர்ப்பிக்க முடியும் என்பதுடன் முறைப்பாட்டாளர் வெளிநாட்டில் வசிப்பவராயின் இங்குள்ள உறவினர் மூலமாகவும் ஆட்சேபனையை சமர்ப்பிக்க முடியும் எனவும் அறியத்தரப்படுகிறது.
5. சட்டரீதியான ஆவணங்களுடன் இணைத்து சமர்ப்பிக்கப்படாத அனைத்து முறைப்பாடுகளையும் நிராகரிக்கும் அதிகாரம் நல்லூர் பிரதேசசபைக்கு உண்டு. என்பதனையும் கவனத்திற்கொள்ளவும்.
6. குறித்த கால வரையறைக்குள் எந்தவித ஆட்சேபனைகளும் எமது சபைக்கு கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் எமது சபையின் ஆதனவரிப் பதிவேட்டில் குறித்த ஆதனத்திற்கான வரியிறுப்பாளராக குறித்த விண்ணப்பதாரரான செல்லையா யோன் லோறன்ஸ் என்பவரின் பெயர் பதிவுசெய்யப்படும் என்பதனையும் அறியத்தருவதோடு இச் செயற்பாட்டினால் ஏற்படக்கூடிய எந்த விளைவுகளையும் நல்லூர் பிரதேச சபை பொறுப்பேற்றுக்கொள்ளாது என்பதும் அறியத்தரப்படுகின்றது.

யுகராஜா ஜெலீபன்
செயலாளர்
நல்லூர் பிரதேசசபை

CR/44605) J-1

19.03.2025

# மரண அறிவித்தல்

பிறப்பு
12 · 08 · 1936



இறப்பு
15 · 03 · 2025

## பரமேஸ்வரி தம்பிஐயா

(கிரிஅம்மா, சூலாஅம்மா)

யாழ்ப்பாணம் கொக்குவில், பூநாறி மரத்தடியைப் பிறப்பிடமாகவும் நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்ட பரமேஸ்வரி தம்பிஐயா கடந்த 15.03.2025 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான துரைஐயா - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற தம்பிஐயா கனகசபை அவர்களின் அன்பு மனைவியும், ஈஸ்வரன், கிரிதரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான பவளம், விஜயரட்ணம், தையல்நாயகி, சரோஜினிதேவி, மகாலிங்கம் மற்றும் பாலரஞ்சித், ரஞ்சித்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும் விஜிதா, சசிகலா, தேவானந், காயத்திரி ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரியா, வரூனிகா, பிரியங்கா, கங்கா, அருண், வெண்பா, மெலீனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19.03.2025) புதன்கிழமை Staganger University Hospital (Kapell), Armauer Hansens Vei 30, 4011. Stavanger, Norwayஇல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (24.03.2025) திங்கட்கிழமை Stokka Forum, Adjunkt Hauglands gate 50, 4022 Stavanger, Norwayஇல் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு இத்தால் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
மகாலிங்கம் சோபா (மருமகன்) (ஸ்ரீலங்கா)
077 929 3573 / 077 612 7793
ஈஸ்வரன் (மகன்) (நோர்வே) +479 280 5851
கிரிதரன் (மகன்) (நோர்வே) +479 866 8800

# மரண அறிவித்தல்

தோற்றம்
20 · 07 · 1935



மறைவு
16 · 03 · 2025

## சுப்பிரமணியம் இராசதுரை (ஆசையா)

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் மட்டுவில் மத்தி சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராசதுரை அவர்கள் கடந்த (16.03.2025) ஞாயிற்றுக்கிழமை மட்டுவிலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-சுப்பிரமணியம் - ரூபவதியம்மா தம்பதியின் மூத்த மகனும் காலஞ்சென்ற குணமணி இராசதுரை அவர்களின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, இராசமலர் , சிவலிங்கம், சிவபாதலிங்கம், விசுவலிங்கம், புவனேஸ்வரி மற்றும் சந்திரலிங்கம் (பருத்தித்துறை), சுந்தரலிங்கம்(கனடா), சரோயினிதேவி (மட்டுவில்), ரஞ்சிதராணி (பருத்தித்துறை), ரதிராணி (கனடா), கிருஸ்னகுமார் (பருத்தித்துறை) ஆகியோரின் அன்பு சகோதரனும் காலஞ்சென்ற நாகராசா வசந்தகுமார் அவர்களின் மாமனாரும் வசந்தகுமார் ராஜினி அவர்களின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.03.2025) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மட்டுவில் நெனியன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
வசந்தகுமார் ராஜினி (மகள்)
மட்டுவில் மத்தி சாவகச்சேரி
077 444 1181. 075 295 0689

(CS 27758) s

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தாபயவின் தீர்மானம் சட்டத்துக்கு முரணானது!

## உயர்நீதிமன்றம் தீர்ப்பு இழப்பீட்டுக்கும் உத்தரவு

கொழும்பு, மார்ச் 19

2020ஆம் ஆண்டு ஹெரோய்ன் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட பெண் ஒருவரை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைத்து விசாரிப்பதற்கு அப்போதைய ஜனாதிபதி கோத்தாபய அனுமதி வழங்கியமை சட்டத்துக்கு முரணானது என உயர்நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு வழங்கியுள்ளது.

பேலியகொடை விசேட விசாரணை பிரிவால் கைது செய்யப்பட்ட ஹேனகம, பொகுனுவிட்ட பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.

இந்தநிலையில், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தம்மைத் தடுப்பு காவலில் வைப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தினூடாக தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகத் தீர்ப்பளிக்குமாறு கோரி குறித்த பெண்ணால் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்தமனு நேற்று உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, குறித்த தீர்மானம் சட்டத்துக்கு முரணானது என தீர்ப்பளிக்கப்பட்டதுடன், மனுதாரரான பெண்ணுக்கு அரசாங்கம் ஒரு லட்சம் ரூபாவை இழப்பீடாகச் செலுத்த வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம-இ)

## மோட்டர்...

வீடொன்றில், தண்ணீர் இறைக்கும் மோட்டரைத் திருடியவரை புனர்வாழ்வுக்கு உட்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் அதிகாலை இந்தத் திருட்டு இடம்பெற்றது. சந்தேகநபர் அன்றையதினமே கைதுசெய்யப்பட்டார். அவர் போதைக்கு அடிமையானவர் என்பது விசாரணைகளின்போது தெரியவந்தது. சந்தேகநபர் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். இதன்போதே, சந்தேகநபரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறும், விளக்கமறியல் முடிந்த பின்னர் புனர்வாழ்வுக்கு உட்படுத்துமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம-27)

## 11,081...

கள் தெரிவிக்கின்றன.

தகவலறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கோரப்பட்ட தகவலுக்கமைவாக குறித்த தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, கடந்த 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளில், காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 27 குடும்பங்களும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 823 குடும்பங்களும், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 796 குடும்பங்களும், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 828 குடும்பங்களும், மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் 342 குடும்பங்களும், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 568 குடும்பங்களும், பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 730 குடும்பங்களும், வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவில் 456 குடும்பங்களும், நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 855 குடும்பங்களும், உடுவில் பிரதே செயலர் பிரிவில் ஆயிரத்து 176 குடும்பங்களும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 526 குடும்பங்களும், ஊர்காவற்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 256 குடும்பங்களும், சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 589 குடும்பங்களும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் இருந்து 109 குடும்பங்களும் என யாழ். மாவட்டத்தில் 11 ஆயிரத்து 81 குடும்பங்கள் தமக்கு காணிகளை வழங்குமாறு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்திடம் கோரிக்கைகளை முன்வைத்துள்ளன.

இவற்றில், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் 2 குடும்பங்களுக்கும், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 38 குடும்பங்களுக்கும், வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் 22 குடும்பங்களுக்கும், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் 85 குடும்பங்களுக்கும், ஊர்காவற்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 26 குடும்பங்களுக்கும், சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 72 குடும்பங்களுக்கும் என மொத்தமாக 352 குடும்பங்களுக்கு இவ்வாறு காணிகள் வழங்கப்பட்டுள்ளன. 10 ஆயிரத்து 729 குடும்பங்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. (அ-ம-125)

## போதை...

தெரிவித்தார். பொலிஸ்பிரதானிகளுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி அநுரகுமார இவ்வாறு தெரிவித்தார்.

சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பதே பொலிஸ் திணைக்களத்தின் பொறுப்பு. சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டாமல் இலங்கையில் நேர்மையான சமூகத்தை உருவாக்கமுடியாது. எனவே, அதை உணர்ந்து பொலிஸார் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும். பொலிஸாருக்குத் தேவையான உதவிகளை அரசாங்கம் வழங்கும் என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன, பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர். (அ-ம-இ)

## ஈஸ்டர்...

உயிர்த்தஞாயிறுத் தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்படவேண்டும். இல்லையேல் நாம் வீதிக்கு இறங்குவோம்' என்று கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை முன்னதாகத் தெரிவித்திருந்தார்.

கர்தினாலின் அறிவிப்புத் தொடர்பில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே, 'கர்தினாலின் ஆதங்கத்தைத் தவறாக எடுக்கவில்லை. அவருடைய நிலைப்பாட்டைப் புரிந்துகொண்டுள்ளோம்' என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எந்தவொரு பிரச்சினையின்போதும் பாதிக்கப்பட்ட சமூகத்தினர் மனதளவில் பெரும் துயரத்தை எதிர்கொள்ளநேரிடும். அந்தச்சமூகத்துடன்தொடர்புடையவர்களுக்கு அது தீராத கவலையை அளிக்கும். அந்த வகையிலேயே கத்தோலிக்க மக்கள் கொல்லப்பட்டமை தொடர்பில் பேராயரின் அதிருப்தியும் கவலையும் ஏற்றுக்கொள்ளக்கூடியவையே. அரசாங்கம் என்ற ரீதியில் எமக்கும் அதற்கான பொறுப்புக் காணப்படுகிறது.

எனவே உயிர்த்தஞாயிறுத் தாக்குதல்கள் குறித்த விசாரணைகளின் முன்னேற்றத்தைக் கூறுவதைவிட, அதன் அடிப்படையில் எடுக்கப்படவுள்ள சட்ட நடவடிக்கைகள் என்ன என்பதை விரைவில் அனைவராலும் அறிந்துகொள்ளமுடியும். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலைப் பயன்படுத்தி ஆட்சியமைத்த கொலையாளிகள், சாட்சியங்களை அழித்துள்ளனர். எனவே, மீண்டும் அந்த விசாரணைகளை மேற்கொள்வது இலகுவான விடயமல்ல. எனினும், இந்தக் கொடூர சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் நிச்சயம் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் - என்றார். (அ-ம-இ)

## மதத்தலங்கள்...

சுனில் செனவி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புத்தசாசன மற்றும் சமய அமைச்சு பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது. கிராமிய பௌத்த விகாரைகளின் அபிவிருத்திக்காக அவதானம் செலுத்தியுள்ளது. அதேபோன்று 'பூஜா பூமி' திட்டத்தின் கீழ் விகாரைகளை போன்று இந்து ஆலயங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், இஸ்லாமியப் பள்ளிகளை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்.

இதேவேளை எமது வேலைத்திட்டத்தின் கீழ் பிரிவெனா பாடசாலை தொடர்பிலும் விசேட அவதானம் செலுத்தியுள்ளோம். அதேபோன்று இந்து மதம் தொடர்பிலும் விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். குறிப்பாக இந்துப் பிள்ளைகளுக்கான அறநெறிப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு இந்துக் கலாசாரத் திணைக்களத்தின் ஊடாக அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆலயங்களின் அபிவிருத்திக்காக விசேட ஒதுக்கீடுகளை மேற்கொள்ளவுள்ளோம். அதன்படி இந்துக் கலாசார திணைக்களத்துக்கான ஒதுக்கீட்டை அதிகரித்துள்ளோம். மதத்தலங்கள் அனைத்தும் வேறுபாடின்றி அபிவிருத்தி செய்யப்படும். அனைத்து இன மக்களின் கலை மற்றும் கலாசாரங்களுக்கும் முன்னுரிமை வழங்குவோம்-என்றார். (அ.மஇ)

## பணிப்புறக்கணிப்பு...

டத்தை முன்னெடுத்தன.

நேற்றுக் காலை 8 மணிக்கு ஆரம்பமான இந்தப் போராட்டம், இன்று காலை 8 மணிவரை இடம்பெறவுள்ளது. இந்தப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தால், துணைமருத்துவ மற்றும் சுகாதார சேவைகள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டன. மருத்துவர்கள் நோயாளர்களைப் பரிசோதித்தபோதிலும், மருந்து வழங்கல்கள், ஊழியேற்றல்கள் போன்றவை மருத்துவமனைகளில் நேற்று இடம்பெறவில்லை. நோயாளர்களுக்கான மருந்துகள் புதன்கிழமை (இன்று) வழங்கப்படும் என்ற அறிவுறுத்தலின் அடிப்படையில் அவர்கள் அனுப்பிவைக்கப்பட்டனர். (அ-ம-26)

## 12 தரப்புகள்...

இவ்வாறு கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## யாழில்...

இது தொடர்பில் அவர் உதயனுக்கு மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தலுக்காக, சுயேச்சைக் குழுக்கள் மற்றும் அரசியற்கட்சிகள் என எல்லாமாகச் சேர்த்து இதுவரை 159 தரப்புகள் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளன. இவற்றில் காரைநகர் பிரதேசசபை மற்றும் சாவகச்சேரி நகரசபைக்காகப் போட்டியிடும் சுயேச்சைகள் தமது வேட்பு மனுக்களையும் தாக்கல் செய்துள்ளன. புதன்கிழமை (இன்று)மேலும் சில தரப்புகள் கட்டுப்பணத்தைச் செலுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது - என்றார். (அ-ம-26)

## திஸ்ஸ விகாரைக்கு...

பெற்றுள்ளன. வடக்கில் நிலவும் இவ்வாறான பிரச்சினைக்கு நல்லிணக்கத்துடனும், பொறுமையுடனும் தீர்வுகாண வேண்டும். தமிழ் மக்களை வெறுப்புணர்வுடன் பார்க்கவேண்டிய தேவை எமக்குக் கிடையாது - என்றார். (அ-ம-இ)

## குருந்தூர்மலை...

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதேஅவர் இவ்வாறுதெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணத்தில் மதத்தலங்கள், விகாரைகள் மற்றும் தொல்பொருள் சின்னங்கள் தொடர்பில் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் முன்வைத்துள்ள விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தியுள்ளோம். இந்தப் பிரச்சினைகள் இன்று நேற்று தோற்றம்பெற்றவையல்ல. பல ஆண்டுகளுக்கு முன்னரே இந்த பிரச்சினைகள் தோற்றம்பெற்றுவிட்டன.

தொல்பொருள் திணைக்களத்தில் காணப்படும் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்படும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் திணைக்களத்துடன் இணைந்ததாக தமிழர்கள் பணிபுரிகிறார்கள். தொல்பொருள் திணைக்களத்தில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறைக்கு தீர்வு காணப்படும். ஆட்சேர்ப்பின்போது தமிழ்மொழி பேசுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வெடுக்குநாறி ஆலயம் தொடர்பில் தொல்பொருள் திணைக்களம் முன்வைத்த பரிந்துரைகளுக்கு முரணாக செயற்பட்டதால்தான் அந்தப்பிரதேசத்தில் பிரச்சினைகள் தோற்றம்பெற்றுள்ளன. இந்துக்கோயில் அபிவிருத்திக்காக 36 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது- என்றார். (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிப்போருக்குப் பதிலடி

## அமெரிக்க விமானங்களை கைவிடுகின்றதா கனடா?

ஒட்டாவா, மார்ச் 19

அமெரிக்காவிடம் இருந்து அதிநவீன போர்விமானங்களைக் கொள்வனவுசெய்யும் ஒப்பந்தங்களை கனடா இரத்துச்செய்யவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் இடையில் வர்த்தகப்போர் உச்சம் பெற்றுள்ளது. கனடாவுக்குப் பெரும் பொருளாதார இழப்புகளையும், பொருளாதாரப் பின்னடைவுகளையும் ஏற்படுத்தும் வகையிலேயே அமெரிக்கா செயற்பட்டுவருகின்றது. இவ்வாறான பின்னணியிலேயே, அமெரிக்காவிடம் இருந்து அதிநவீன போர்விமானங்களைக் கொள்வனவுசெய்யும் ஒப்பந்தங்களைக் கனடா இரத்துச் செய்யவுள்ளதாகத் தெரியவருகின்றது.

போர்த்துக்கல்லுக்கு எதிராகவும் அமெரிக்கா கடுமையான வரிவிதிப்புகளை மேற்கொண்டிருந்தது. இதனால், அமெரிக்காவின் எப்-35 போர்விமானக் கொள்வனவை இரத்துச்செய்யப்போவதாக போர்த்துக்கல் இரு தினங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தது. தற்போது கனடாவும் அவ்வாறான முடிவைப் பரிசீலித்து வருவதால், அமெரிக்காவின் இராணுவத் தளபாட விற்பனையில் பின்னடைவுகள் ஏற்பட வாய்ப்பிருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவிடம் இருந்து பெருமளவு இராணுவத் தளபாடங்களைக் கொள்வனவு செய்துவருகின்றன. ஆனால், அந்த நாடுகளுக்கும் ட்ரம்ப் வரிகளை விதித்துள்ளதால், அவை பிரான்ஸிடம் இருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)




## இஸ்ரேலின் தாக்குதலில் 500 பலஸ்தீனர்கள் பலி!

**டெல்அவிவ், மார்ச் 19**

**ஹமாஸுடனான போர் நிறுத்த ஒப்பந்தத்தைக் கைவிடுவதாக அறிவித்து, இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதல்களால் காசாவில் 500க்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.**

வெறும் 18 மணிநேரத்தில் நடத்தப்பட்ட மூன்றுகட்ட வான் தாக்குதல்களில் இந்தப் பேரவலம் சம்பவித்துள்ளது என்று பலஸ்தீன போர்க் கண்காணிப்பகங்கள் கூறியுள்ளன. ஹமாஸ் போராளிகளை அல்லாமல், பொதுமக்களையும், பாடசாலைகளையும் இஸ்ரேல் தாக்கி வருகின்றது என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் தெரிவித்துள்ளது.

முதல்நாள் மீட்புப் பணிகளின் அடிப்படையிலேயே 500க்கும் மேற்பட்டவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள் என. கட்டட இடிபாடுகளில் இன்னும் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் படுகாயங்களுடனும் சடலங்களாகவும் கிடக்கின்றனர் என்றும் பலஸ்தீன போர்க் கண்காணிப்பகங்களின் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளன.

காசா மீதான தாக்குதல்களுக்கும், போர் நிறுத்தத்தைத் தன்னிச்சையாக முடிவுக்குக் கொண்டுவந்தமைக்கும் எகிப்து, கட்டார், ஈரான், சவூதி உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளன. போர்ப் பதற்றமொன்றை எந்தக் காரணமும் இல்லாமல் இஸ்ரேல் ஏற்படுத்தியுள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரிகளும் கண்டித்துள்ளனர். (ம)

## சீனாவுடன் கடன்மறுசீரமைப்பு விரைவில் வெற்றியளிக்கும்!

### விஜித ஹேரத் உறுதி

கொழும்பு, மார்ச் 19

எமது நட்புநாடான சீன அரசாங்கத்துடனான இருதரப்புக் கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் விரிவான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வெகுவிரைவில் இருதரப்புக் கடன்மறுசீரமைப்பு வெற்றிபெறும் என்று வெளிவிவகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி அமைச்சர் விஜித ஹேரத் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: சர்வதேச நாணயநிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கையின் பிரதான கடன் வழங்குநர்கள் உட்பட நட்பு நாடுகள் பல ஒத்துழைப்புகளை வழங்கின. இதற்கமைவாக நாணயநிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன்தொகை பெற்றுக்கொள்ளப்பட்டது- என்றார். (ச-33)



உள்ளூராட்சித் தேர்தலில்

## சுலக்சன் தலைமையில் சுயேச்சைக்குழு போட்டி

யாழ்ப்பாணம், மார்ச். 19

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் யாழ்ப்பாணம் மாநகர சபை, கோப்பாய்ப் பிரதேசசபை மற்றும் வேலணைப் பிரதேசசபை ஆகிய மூன்று சபைகளிலும் தொழிலதிபர் ஞானப்பிரகாசம் சுலக்சன் தலைமையிலான சுயேச்சைக் குழு போட்டியிடவுள்ளது.

குறித்த சபைகளில் போட்டியிடுவதற்காக யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை கட்டுப்பணத்தை சுலக்சன் தலைமையிலான குழுவினர் செலுத்தியுள்ளனர். யாழ். மாநகரசபை முதல்வர் வேட்பாளராக தொழிலதிபர் ஞானப்பிரகாசம் சுலக்சன் களமிறங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-22,125)



## ஆங்கில தின விழா

யாழ்.கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலையில் வருடாந்த ஆங்கில தின விழா கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. விழாவின்போது பாடசாலை மட்டத்திலான ஆங்கிலதினப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ச-25)

**இருப்பினை விற்றுத் தீர்த்தல்**

**(30 - 50 % விலைக்கழிவு)**

- குழந்தைகளுக்கான உபகரணங்கள் மற்றும் உடைகள்
- கர்ப்பிணித் தாய்மார்களுக்கான பொருட்கள்
- விளையாட்டு உபகரணங்கள்.

**வியாபார நிறுவனங்களுக்கு மேலதிக விலைக்கழிவு உண்டு**

K.K.S.வீதி, (உப்பு மடம் சந்தி), கோண்டாவில். 077 801 0219



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.